


மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடமும் கிடைக்கும்:

மெஸர்ஸ். குப்தா கார்ப்பொரேஷன்

தபால் பெட்டி நெ. 35, 17-A/428, அருணாசல ஆச்சாரி தெரு, சேலம்


லக்ஸ் டாய்லட் சோப்பினால் கண்ணாம்பா
தினந்தோறும் அழகுபடுத்திக்கொள்ளும் முறை இதுவே
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின்மேல் தடவுகிறேன்.
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்.
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
LUX TOILET SOAP
★ சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப் ★
கண்ணாம்பாவிற்கு, அவருடைய அருமையான சருமத்தை குளுமையாகவும், அப்பழுக்கற்றதாகவும் செய்துகொள்ள ஒழுங்கான பாதுகாப்பு அவசியம் என்பது தெரியும். நீங்களும் உங்கள் சருமத்தை சீர்படுத்துவதில் சிரத்தையெடுத்துக் கொள்ளுகிறீர்களா? இந்த சுலபமான அழகுபடுத்திக் கொள்ளும் முறையை 30 நாட்கள் கையாளுங்கள். இவ்வெண்மையான, சிறந்த சோப்பின் குளிர்ந்த பரிமளத்தை நீங்கள் விரும்புவீர்கள். மேலும், இதன் தாராளமாயுண்டாகும் நுரை உங்கள் சருமத்தை சுத்தமாக்கி பளபளப்பை யளிக்கும். உங்கள் சருமத்திற்கு அதற்கு வேண்டிய பாதுகாப்பை யளியுங்கள். உண்மையான அழகையளிக்கும் லக்ஸ் டாய்லட் சோப்பைப் பயன்படுத்துங்கள்.
LTS. 152-23-48 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 இதழ் 31	1947 மார்ச் 2	விய மாசி 18

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

தமிழ் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாடகக் கலை சிறப்புற்று விளங்கியது. தமிழ் மறை அருளிய திருவள்ளுவர் ஒரு குறளில், "ஒருவனுக்குச் செல்வம் சேரும் போது நாடகம் பார்ப்பதற்கு ஜனங்கள் வருவதுபோல் கொஞ்சம் கொஞ்சமாக வருகிறது; செல்வம் அவனை விட்டுப் போகும்போதோ, நாடகம் முடிந்ததும் ஜனக் கூட்டம் கலைந்து போவதுபோல் ஒரே அடியாகப் போய் விடுகிறது!" என்று சொல்லி யிருப்பதிலிருந்து, வள்ளுவர் காலத்துக்கு முன்னாலேயே தமிழ் நாட்டில் நாடகம் பார்ப்பதற்கு ஜனங்கள் திரளாகக் கூடினார்கள் என்று அறிகிறோம்.

இவ்விதம் தமிழ் நாட்டில் தொன்று தொட்டுச் சிறப்படைந்து வந்திருக்கும் நாடகக் கலையை இன்றைய தினமும் சிலர் நன்கு வளர்த்து வருகிறார்கள். சினிமா என்னும் பெரும் புயலால் நாடகக் கலை என்னும் மங்கள தீபம் அணைந்து விடாமல் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களில் தலைசிறந்த ஒருவரான நவாப் ஸ்ரீ ராஜமாணிக்கம் "ஸ்ரீ கிருஷ்ண லீலை," "ஏகநாதர்," "இன்பசாகரன்" முதலிய பல நாடகங்களின் மூலம் தமிழ்நாட்டில் பெரும் புகழ் பெற்றவர். சென்ற ஐந்தாறு வருஷ காலமாகத் திருவாங்கூர் சமஸ்தானத்தில் நாடகம் நடத்திவிட்டுச் சமீபத்திலே தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்திருக்கிறார். அப்படி வரும்போது "ஐயப்பன்," "குமார விஜயம்" முதலிய பக்தி ரஸம் ததும்பும் புதிய நாடகங்களைத் தமிழ்மக்களுக்குப் பரிசாகக் கொண்டு வந்திருக்கிறார். "ஐயப்பன்" நாடகத்தில் ஒரு முக்கியமான காட்சி, (தாயின் தலைவலியைத் தீர்ப்பதற்காக ஐயப்பன் புலிப் பால் கொண்டுவரச் சென்று ஒரு மந்தை புலிகளுடன் திரும்பி வரும் அபூர்வமான காட்சி) நமது இந்த இதழின் அட்டையைச் சிறப்பிக்கின்றது.



மேலே வுள்ள வட்டத்தில் விளங்குபவர், ஸ்ரீ ராஜமாணிக்கம் அவர்கள்தான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

கல்லிடைக் குறிச்சியில் நடந்த முதல் நாள் "ஐயப்பன்" நாடகத்தில் வசூலான தொகையில் வரி போகப் பாக்கித் தொகை ரூ. 1951ஐ எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த மண்டபத்துக்கு ஸ்ரீ ராஜமாணிக்கம் நன்கொடையாக அளித்திருக்கிறார். "வெற்றி எட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே!" என்று பாடிய தேசிய மகா கவிக்குக் காணிக்கை செலுத்தி விட்டு ஸ்ரீ ராஜமாணிக்கம் தமது தமிழ்நாட்டுப் பிரயாணத்தைத் தொடங்கி யிருப்பதைப் பெரிதும் பாராட்டுகிறோம். அவருடைய பிரயாணம் ஒரு திக் விஜயமாகவே விளங்கும் என்றும் எதிர் பார்க்கிறோம்.

(மேற்படி நன்கொடை அளிப்பு வைபவத்தைப் பற்றியும் "ஐயப்பன்" நாடகத்தைப் பற்றியும் விரிவான கட்டுரை அடுத்த "கல்கி" இதழில் வெளியாகிறது.)

புகைப்படம் எடுத்தவர்: ஸ்ரீ எம். டி. கணேசன்.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 31

என்ன சேதி?

சீற்றம் பொங்குகிறது!

கனம் பிரகாசம் தற்போது ஆந்திர ஜில்லாக்களில் நடத்திக் கொண்டு வரும் தம்முடைய பிரதம மந்திரிப் பதவியின் அந்தியகாலப் போராட்டத்தில் யாரையும் பாக்கி வைக்கவேயில்லை.

காங்கிரஸ் தலைவரா? "அவர் என் காரிய தரிசியா, மானேஜரா?" என்று அவரை அலட்சியமாக ஒதுக்கித் தள்ளினார். காரியக் கமிட்டியா? "அதற்கும் இந்த மாகாணத்துக்கும் என்ன சம்பந்தம்? ஜனங்கள் அல்லவா தீர்ப்புச் சொல்ல வேண்டும்?" என்று சட்டம் பேசினார். சர்தார் படேலா? "அவருக்கு என்ன சொல்வதென்று அவருக்குத் தெரியும், எனக்கு என்ன செய்வதென்று எனக்குத் தெரியும்" என்று கன்னத்தில் அறைந்தாற் போல் பதில் சொன்னார்.

அவ்வளவு பெரிய பெரிய தலைவர்களெல்லாம் அந்தப் பாடு பட்டுக் கொண்டிருக்கும் போது கேவலம், இந்தப் பத்திரிகைகள் எந்த மூலைக்கு?

இந்தத் தடவை கனம் பிரகாசத்தின் அடக்க முடியாத கோபத்துக்கு இலக்காயிருப்பவை சென்னைப் பத்திரிகைகள். "தற்போது கண்ட்ரோல் எதுவும் இல்லை. ஆனால், நான் நினைத்தால் இந்தப் பத்திரிகைகளையெல்லாம் ஒரே அடக்காக அடக்கி விடுவேன்" என்று அவர் தம்முடைய ஆந்திர சுற்றுப் பிரயாணத்திலே கூடூர் என்னும் இடத்தில் சொல்லியிருக்கிறார். இதே கனம் பிரகாசம் கொஞ்ச காலத்துக்கு முன்னால், சென்னைப் பத்திரிகைகள் தம்முடன் ஒத்துழைத்து வருவதாக அவற்றைப் பாராட்டிப் பேசினார்.

காரணம் என்ன?

அன்று அப்படிச் சொன்னவர் இன்று ஏன் இந்த மாதிரியாகச் சொல்லவேண்டும்? இதற்குக் காரணம் என்னவென்பது கனம் பிரகாசம் சொல்லாமலே நமக்கு நன்றாக விளங்கும். ஸ்ரீ பிரகாசத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் போவதாகத் தற்போது வெளி வந்திருக்கும் செய்தியை எல்லாப் பத்திரிகைகளும் பிரபலமாகப் பிரசுரித்திருப்பதே அவருடைய சீற்றத்துக்குக் காரணமாகும்.

ஆனால், இதற்குப் பத்திரிகைகள் என்ன செய்யும்? கனம் பிரகாசத்துக்குப் பிடித்தமான செய்திகளைத்தான் பத்திரிகைகள் பிரசுரிக்க வேண்டும்; பிடிக்காத செய்திகளைப் பத்திரிகைகள் பிரசுரிக்கக் கூடாது? அம்மாதிரியான கொள்கையைப் பின்பற்றத் தொடங்கினால், கனம் பிரகாசத்துக்குத் தற்போது சேர்ந்திருக்கும் கதிதான் பத்திரிகைகளுக்கும் சேரும். அதாவது, பொதுஜனங்களுக்குப் பத்திரிகைகள் மீது நம்பிக்கை யில்லாமற் போகும்.

ஒன்று பாக்கி!

பிரதம மந்திரி ஸ்ரீ பிரகாசம் இம்மாதிரியாகச் சென்னைப் பத்திரிகைகளையெல்லாம் கடுமையாகத் தாக்கிய போதிலும், ஒரே ஒரு வட இந்தியப் பத்திரிகையாவது அவருடைய நன் மதிப்புக்குப் பாத்திரமாயிருப்பது சந்தோஷப்படத் தக்க விஷயம். "காந்திஜியின் 'ஹரிஜன்' ஒன்றுதான் நல்ல பத்திரிகை. அதுதான் சென்னை மந்திரி சபையையும் அது செய்து வரும் எல்லா நல்ல காரியங்களையும் ஆதரித்து

விவரமாக எழுதி வருகிறது" என்று அவர் சொல்லி யிருக்கிறார்.

நல்ல வேளை, காங்கிரஸையையும் 'ஹரிஜனை'யுமாவது விட்டு வைத்தாரே, மகானுபாவன்!

ஆனால், ஸ்ரீ பிரகாசம் தற்போது போகும் போக்கைப் பார்த்தால் இன்னும் கொஞ்ச காலில் காங்கிரஸும் 'ஹரிஜனு'ம் கூட அவருடைய நன்மதிப்பிலிருந்து மறைந்து சேறத்தாக்கும் வசைக்கும் உள்ளானால் அதில் அதிசயம் எதுவும் இல்லை.

குழப்பம் நின்றது

ஏறக்குறைய சென்ற ஒரு மாத காலமாகப் பஞ்சாபில் நடந்து வந்த குழப்பம் நின்று லீக்குக்கும் அந்த மாகாண சர்க்காருக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் குழப்பத்தையும் சட்ட மறுப்பையும் லீக் எதற்காக ஆரம்பிக்க வேண்டும், இப்போது எதற்காக அதை நிறுத்த வேண்டும் என்பதுதான் யாருக்கும் புரியவில்லை.

முஸ்லீம் லீக் தொண்டர்கள் ராணுவ டிரில் செய்வதற்கும் ஆயுதங்களைக் கொண்டு போவதற்கும் உரிமை வேண்டும் என்பதற்காகவே லீக் இந்தக் குழப்பத்தை ஆரம்பித்தது. ஆனால், இப்போது மேற்படி குழப்பத்தின் மூலம் பஞ்சாப் லீக் தன்னுடைய லட்சியத்தை அடைந்ததா என்றால், அதுதான் இல்லை. "லீக் தொண்டர்கள் ராணுவ முறையில் டிரில் செய்யக் கூடாது, ஆயுதங்களைக் கொண்டு போகக் கூடாது" என்று பஞ்சாப் பிரதமர் கிஸிர் ஹயத்கான் அன்று சொன்னது போலவே இன்றும் தெளிவாகவும் கண்டிப்பாகவும் சொல்லி யிருக்கிறார்.

வெறுமே பாஞ்சாலத்தில் ஒரு குழப்பம் உண்டாக்க வேண்டும் என்பதுதான் லீக்கர்களுடைய நோக்கம். அதில் வென்றுமானால், அவர்கள் வெற்றி யடைந்ததாகச் சொல்லலாம்.

முடித்து வைத்தார்!


பக்கிங்காம் கர்னாடிக் மில் வேலை நிறுத்தத்தை 40 நாள் வரை நீடிக்க வைத்துக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்த சென்னை மந்திரி சபை, கோயமுத்தூர் வேலை நிறுத்தத்தை இந்த யுகத்தில் எங்கே தீர்த்து வைக்கப் போகிறது என்று நாம் எண்ணி யிருந்தோம். ஆனால், நல்ல வேளையாகப் பிரதம மந்திரி பிரகாசம் இம்முறை கொஞ்சம் சுறுசுறுப்பை வரவழைத்துக் கொண்டு கோயமுத்தூருக்குப் போய் மேற்படி வேலை நிறுத்தத்தை முடித்து வைத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

மேற்படி பதின்மூன்று நாள் வேலை நிறுத்தத்தால் 5,040 பேல் நூல் உற்பத்தி நஷ்டமாகப் போனதாகச் செய்தி வந்திருக்கிறது. அந்த நஷ்டம் நஷ்டமே யாகும். அதை நிவர்த்திக்க வழியில்லை. பிரதம மந்திரி கொஞ்சம் மனம் வைத்து முன்னமே முயன்றிருந்தால், இந்த நஷ்டத்தை நிவர்த்தி செய்திருக்கலாம். ஆனால், நம்முடைய சென்னை மந்திரி சபையைப் பொறுத்த வரையில், இந்தப் பதின்மூன்று நாளைக்குள்ளாவது அவர்கள் வேலை நிறுத்தத்தை நிறுத்தியதற்காகத் திருப்தி யடைய வேண்டியதுதான் சென்னை மாகாண மக்களுடைய கடமையாகும்.

நிகழ்ச்சிச் சித்திரம்

-சாஸ்திரி




வெருண்டு ஓடும் வின்ஸ்டன் சர்ச்சில்.
வேவல் போகிறார் விருந்தாளி வருகிறார்.
மௌண்ட் பேட்டன்
வருக!
30-6-48
வரையில்
இந்தியாவின்
விருந்தாளியாக
இருங்கள்.
ஜின்னா இப்படியே இன்னும் எவ்வளவு காலம்
நின்று கொண்டிருக்கப் போகிறார்?
நேருவின் உருக்கமான வேண்டுகோளுக்குப் பிறகாவது ஜின்னாவின் முறுக்கு தளருமா?
அ.நி.சபை

சாப விமோசனம்

"அடுத்த வாரத்துக்குள் உன்னுடைய அந்தகத்துவம் நிச்சயமாக நீங்கிவிடும்."

பல ஆண்டுகளாகக் கண்களை இழந்து தவித்துக் கொண்டிருந்த ஒருவனுக்கு மேற்கூறியவிதம் வைத்திய நிபுணர் ஒருவர் சொன்னால், அவன் மனம் எப்படி இருக்கும்? அவனுடைய ஆனந்தத்தை அளவிட முடியுமா?

"சென்ற இருநூறு வருஷ காலமாக உங்கள் குடும்பத்தைப் பிடித்து வந்த சாபம் அடுத்த புதன்கிழமையோடு நிச்சயமாகத் தொலைந்து போகிறது" என்று ஜோஸ்ய நிபுணர் ஒருவர் கூறினால், அக் குடும்பத்தினரின் மனோ நிலைமை எவ்வாறு இருக்கும்? அவர்களுடைய குதூகலத்தை வர்ணிக்க முடியுமா?

* * *

சுப வருஷமும் சுப மாதமும் சுப தினமுமான 1948-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ந் தேதி புதன்கிழமைக்குள் பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் இந்தியாவில் ஒரு துளிக் கூட இல்லாமல் கப்பலேறிப் போய் விடப் போகிறது!

இனி எக்காலத்தும் அது திரும்பி வரப்போவதில்லை; திரும்பி வரவும் வேண்டாம்.

சந்திர சூரியர் உள்ளளவும் மேற்படி தினம் இந்தியாவில் மிகவும் மங்களகரமான ஒரு தினமாகவும், உலக சரித்திரத்தில் மகத்தான பிரசித்தி பெற்ற ஒரு தினமாகவும் விளங்கிவரப் போகிறது.

ஏனெனில், அது இந்தியாவின் சாப விமோசன தினமல்லவா?

முன்பே பாரத அன்னையின் விலங்குகள் தவிடு பொடியாகி விட்டன. முன்பே பாரத புண்ணிய பூமியில் சுதந்திரோதயமும் ஆகிவிட்டது. கோடி சூரியப் பிரகாசமுள்ள சுதந்திர சிம்மாசனத்தில் பாரததேவி திவ்யாரோகணம் செய்யும் தினமும் இப்போது நிச்சயிக்கப் பெற்றுவிட்டது!

வருகிறது, வரப் போகிறது என்றெல்லாம் உலகம் முழுவதும் எதிர்பார்த்து வந்த பிரிட்டிஷ் அறிக்கை கடைசியாகச் சென்ற மாதம் 20-ந் தேதி வெளிவந்தே விட்டது.

1948-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதிக்கு மேல் ஒரு நிமிஷம்கூட பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் இந்தியாவில் இருக்கப் போவதில்லை என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி அந்த அறிக்கையில் நிச்சயமாகக் கூறிவிட்டார்.

அட்லியின் அறிக்கையில் அநேக விபரீதங்கள் அடங்கியிருப்பினும், அவ்வறிக்கை மகாத்மா காந்திக்கும், இந்திய தேசிய மகாசபைக்கும், 40 கோடி இந்திய மக்களுக்கும் ஒரு மகத்தான வெற்றி என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஏனெனில், இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் வாடையும் இருக்கக் கூடாதென்பதற்காகத்தான் இந்திய மகா ஜனங்கள் சென்ற பல வருஷங்களாகத் தவம் கிடந்தார்கள். அதற்காகத்தான் எத்தனையோ சகோதர சகோதரிகள் தங்களுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் சுதந்திர பலி பீடத்தில் அர்ப்பணம் செய்தார்கள்.

பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் இந்தியாவிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று கூறியதற்காகத்தான் 1942-ம் ஆண்டு நமது அரும்பெரும் தலைவர்களும் லட்சக் கணக்கான தேச பக்தர்களும் சிறைப்பட்டார்கள்.

அப்போது தேசமெங்கும் கொழுந்து விட்டெரிந்த புரட்சி ஜ்வாலையின் காரணமும் அதுதான்.

பிரிட்டிஷ் அதிகார வர்க்க விஷ விருக்ஷத்தை வேரோடு பெயர்த்து எறிவதற்காகத்தான் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் இந்திய தேசிய சைன்யமும் உருவாகி என்றும் அழியாத கீர்த்தியைப் பெற்றது.

மேற்கூறிய எல்லோருடைய ஏகோபித்த அபிலாஷையையும் நிறைவேற்ற வேண்டுமென்றுதான், அட்லி துரையும் அடுத்த வருஷம் ஜூன்

மாதத்துக்குப் பிறகு இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இருக்கப் போவதில்லை என்று இப்போது சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார்!

* * *

இன்று பிரிட்டிஷாருக்கும் இந்தியர்களுக்கும் உள்ள பிரச்னையில் சிக்கல் எதுவும் இல்லை. பிரிட்டிஷாரை இந்தியர்கள் கேட்டுக் கொண்டதெல்லாம் "வெளியேறுங்கள்" என்பது தான். "சரி, வெளியேறுகிறோம்" என்று இப்போது பிரிட்டிஷார் பிரகடனம் செய்திருப்பதுடன், அவ்விஷயமாய் இனி யாருக்கும் எவ்விதச் சந்தேகமும் இருக்கக் கூடாதென்பதற்காக, "நாங்கள் 1948-ம் வருஷம் ஜூன் 30-ந் தேதிக்குள் வெளியேறி விடுகிறோம்" என்று தேதியும் நிர்ணயித்து விட்டார்கள்.

'கூடிய சீக்கிரம்,' 'சில மாதங்களில்,' 'சில வருஷங்களில்' என்பன போன்ற கால கெடுக்களைக் குறித்து அபிப்பிராய பேதங்களும் வியாக்கியான பேதங்களும் ஏற்படலாம்.

ராஜதந்திர பாஷை அகராதியில் பண்டிதர்களான பிரிட்டிஷாரால் கூட '30-6-1948' என்பதற்கு இரண்டு வியாக்கியானங்கள் செய்ய முடியாது.

அடுத்த வருஷம் குறிப்பிட்ட தேதிக்குள் தங்களுடைய 'வெளியேறு படலம்' முடிந்துவிடும் என்று கூறியுள்ள பிரிட்டிஷார், இப்போதே 'வெளியேறு படலம்' ஆரம்பமாகிறதென்பதை நிரூபிப்பதற்காக வைஸ்ராய் வேவல் பிரபுவை முதலாக வெளியேற்றித் தங்களுடைய அந்தரங்க சுத்தியையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

* * *

ஆனால், ஒரு சந்தேகம் மாத்திரம் இந்தியர்களுடைய மனதை ஆட்கொண்டு அல்லல் படுத்துகின்றது.

குறிப்பிட்ட தேதிக்குள் பிரிட்டிஷார் வெளியேற நிச்சயித்து விட்டார்களாதலால், இனி அதைப் பற்றி எதுவும் சொல்லுவதற்கில்லை. எனினும், பிரிட்டிஷார் இந்தியாவை எந்த நிலைமையில் விட்டுவிட்டுச் செல்லப் போகிறார்கள்?

திருவாமூத்தான் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான் என்பது போல், இருநூறு ஆண்டுகளாக இழைத்த இன்னல்கள் போதாவென்று போகும்போதும் ஒரு பிரளயத்தை உண்டாக்கப் போகிறார்களா? அல்லது இந்தியாவில் தாங்கள் செய்த எண்ணிக்கையற்ற பாதகங்களுக்குப் பிராயச்சித்தமாகவும், பல தலைமுறைகளாக இந்தியாவின் உப்பைத் தின்றதற்கு நன்றி செலுத்தும் நோக்கத்துடனும் தங்களுடைய அந்திய காலத்திலாவது இந்தியாவின் அமைதியையும் சீரையும் சிறப்பையும் சீரழிக்காமல் வெளியேறப் போகிறார்களா?

* * *

பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையான 'மான்செஸ்டர் கார்டியன்' மேற்படி கேள்விகளுக்கு வெகு தெளிவாகப் பதில் கொடுத்திருக்கிறது.

"இந்தியாவிலிருந்து நாங்கள் வெளியேறும்போது காங்கிரசுக்கும் முஸ்லிம் லீக்குக்கும் சமரசம் ஏற்படாவிடில், பிரிட்டிஷார் என்ன செய்யப் போகிறார்கள்? அவர்கள் இந்தியாவின் நிர்வாக அதிகாரத்தைக் காங்கிரஸிடம் ஒப்புவிக்கப் போகிறார்களா? அல்லது முஸ்லிம் லீக்கிடம் ஒப்புவிக்கப் போகிறார்களா? முஸ்லிம் லீக்கிடம் ஒப்புவித்தோமாயின், நாம் பாக்கிஸ்தானுக்கு ஆசீர்வாதம் அளித்தவர்களாவோம்; இந்தியாவைப் பிளந்தவர்களாவோம்; தேசியத்துக்கு அஸ்திவாரம் மதவேற்றுமை என்ற அக்கிரமத்தை அங்கீகரித்தவர்கள் ஆவோம்; என்றென்றும் பெரும்பாலான இந்தியர்களின் பகைக்கு இலக்காவோம்; இந்தியாவில் தேசிய உணர்ச்சியையே நசுக்கியவர்கள் ஆவோம்.

"ஆனால், இந்தியாவின் ஒற்றுமையே காங்கிரஸின் மூலாதாரமான கொள்கை. காங்கிரஸ் தலைவர்களோ மகா மேதாவிகள்; சத்திய சீலர்கள். உலகில் மிருகத்தனமின்றி அன்னிய சர்க்காரை எதிர்த்த தேசிய ஸ்தாபனம் இந்திய காங்கிரஸைத் தவிர வேறெதுவும் இல்லை. அதற்காக நாம் சாந்திஜிக்கும் உயர்ந்த அறிவும் ஒழுக்கமும் உள்ள நேரு குடும்பத்தினருக்கும் வந்தனம் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். காங்கிரஸிடம் நிர்வாக அதிகாரத்தை ஒப்புவித்தால், அது தன் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாதென நம்பலாம்" என்று 'மான்செஸ்டர் கார்டியன்' கூறியிருக்கிறது.

எப்போதுமே முற்போக்கான முறைகளைக் கண்டு முடக்குவாதம் செய்யும் சர்ச்சிலையும் அவருடைய ஒரு சில சகாக்களையும் தவிர, மற்ற சகல பிரிட்டிஷ் பிரமுகர்களும் இந்தியப் பிரச்னையின் முக்கியத்தை நன்கு உணர்ந்து, பிரிட்டிஷ் சர்க்காரின் தீர்மானத்தையும் ஆதரித்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். அதாவது, தாங்கள் பறை சாற்றும் ஜனநாயகக் கொள்கைக்கு நேர் விரோதமாக இந்தியாவின் சுதந்திரத்துக்கு முட்டுக் கட்டை போடும் மானக்கேடான முறையை ஒழித்தாலன்றி, சர்வதேச மேடையில் தாங்கள் தலைநிமிர்ந்து நிற்க முடியாதென்பதை பிரிட்டிஷ் பிரமுகர்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் சர்க்காரின் தீர்மானத்தைக் கண்டித்துப் பிற்போக்காளர்கள் நிறைந்த பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தை யொட்டி அங்கு விவாதம் நடந்தது. இந்தியாவின் நிர்வாக அதிகாரத்தை முற்றிலும் இந்தியர்களிடம் ஒப்புவிக்கத் தேதி நிர்ணயித்திருப்பதன் மூலம், காங்கிரஸிடம் பிரிட்டிஷ் சர்க்கார் யாதொரு நிபந்தனையுமின்றிச் சரணாகதி யடைந்து விட்டார்கள் என்றுகூட ஒரு பிரபு பதறிப் போய்க் கதறினார்.

அப்படியிருந்தும் இறுதியில் கண்டனத் தீர்மானம் வாபஸாகியிருக்கிறது. பத்தில் ஒரு மடங்கு பிரபுக்களின் ஆதரவு கூட சர்க்காருக்கு இராத ஒரு சபையில் மேற்படி கண்டனத் தீர்மானம் வாபஸாகியிருப்பதிலிருந்து, அங்குகூட சூழ்நிலை இந்தியாவுக்குச் சாதகமாக இருக்கிறதென்பது வியக்தமாகின்றது.

பிரபுக்கள் சபையில் பேசிய மாஜி இந்தியா மந்திரிகளும், மாஜி வைஸ்ராய்களும், மாஜி கவர்னர்களும் இப்போதாவது உண்மை நிலையை நன்குணர்ந்து விவேகத்துடன் பேசியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

அரசியல் ஞான சூன்யம் காரணமாக அன்று அமெரிக்கக் காலனிகளை இழந்தோம். பின்னர் அயர்லாந்தை இழந்தோம். இப்போது இந்தியாவின் நட்பையும் இழக்க வேண்டுமா? நாம் கண்ணியமாகவும் பெருந்தன்மையுடனும் சிநேக பாவத்துடனும் இந்தியாவிலிருந்து வெளியேறுவிடில், பின்னர் அங்கிருந்து விரட்டப்பட்டு வெட்கக்கேடான முறையில் ஓடி வரும்படி நேரும். பிரிட்டிஷ் சர்க்கார் இப்போது செய்துள்ள தீர்மானத்தின் பலனாக பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் பரஸ்பரம் நம்பிக்கையும் நட்பும் நல்லெண்ணமும் நீடிக்கும். இவ்வாறாக மாஜி மந்திரி யொருவர் பேசியிருக்கிறார்.

அடுத்த வருஷம் ஜூன் மாதக் கடைசிக்குள் இந்தியாவிலுள்ள சகல பிரிட்டிஷ் துருப்புகளும் வாபஸாகிவிடுமென்பதையும் மேற்படி சபையில் பிரிட்டிஷ் சர்க்கார் தெரிவித்திருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உயிர் வாழ வேண்டுமாயின், பலாத்கார முறைகளைக் கைக்கொள்ளாமல் இந்தியாவிலிருந்து கண்ணியமாக வெளியேறுவதுதான் சிறந்ததென்றும் பிரிட்டிஷ் சர்க்கார் மந்திரி லார்டு ஜோவிட் பட்டவர்த்தனமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

* * *

எனவே, இனி இந்தியர்கள் பிரிட்டிஷாரைக் குறை கூறுவது அர்த்தமற்றதாகும்.

ஏனெனில் 1942-ம் வருஷம் பிரிட்டிஷார் உடனே வெளியேற வேண்டும் என்று தீர்மானம் செய்த போது, அவர்கள் இந்த விதமாகத்தான் வெளியேற வேண்டும் என்று காங்கிரஸ் நிபந்தனை எதுவும் விதிக்கவில்லை.

தவிர, பிரிட்டிஷார் வெளியேறிவிட்டால், இந்தியாவில் சமூகப் பூசல்கள் ஒழிந்து விடுமென்றும் பொறுப்புள்ள சகலரும் கூறி வந்திருக்கிறார்கள்.

ஆகையால் பிரிட்டிஷார் வெளியேறும் போதும், வெளியேறிய பிறகும் இந்தியாவில் அமைதியை நிலை நிறுத்தி உலகத்தின் நன்மதிப்பைப் பெறவேண்டியது இந்தியர்களின் கையிலேதான் இருக்கிறது.

இந்தியாவின் எதிர்கால க்ஷேமம், மேற்படி கடமையை இந்தியாவிலுள்ள பல்வேறு கட்சிகளும் எவ்வாறு நிறைவேற்றப் போகின்றன என்பதையே பொறுத்திருக்கிறது. இந்த உண்மையைத்தான் மகாத்மா காந்தியும் பண்டித ஜவாஹர்லால் நேருவும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் சர்க்காரின் அறிக்கை காரணமாக இந்திய நிலைமையில் ஒரு புதிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்ற மன்னர்கள் மண்டலத்துக்கும் முஸ்லிம் லீக்குக்கும் இப்போதாவது ஞானோதயம் ஏற்பட்டாலன்றி எதிர்கால நிலைமை பற்றி எதுவும் கூறுவதற்கில்லை.

ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். அதாவது, மகா வல்லமை பொருந்திய பிரிட்டனே இந்திய தேசிய மகா சபையின் கோரிக்கைக்கு இணங்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, பிரிட்டனைப் பணிய வைத்த காங்கிரஸ் உள்நாட்டுக் கட்சிகளின் உறுமல்களைக் கண்டு பயந்துவிடாது.

ஆகையால் முட்டுக்கட்டை போடும் கோஷ்டிகள், மாபெருந் தலைவர் பண்டித நேருவின் உருக்கமான வேண்டுகோளுக்கு இணங்கி, இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தையாவது இழக்காமல் அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொண்டு இந்திய சர்க்காருடனும் ஒத்துழைப்பார்களாயின் அவர்களுக்கும் நன்மை, தேசத்துக்கும் நன்மை. இந்த நேர்மையான பாதையை விட்டுவிட்டு, நிந்தியத் தகராறுகளிலும் நேர் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதால் விபரீத விளைவுகளும் வீண் கஷ்டங்களுமே ஏற்படும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

பேஷ், பரோடா!

முடியரசு என்றாலே இன்று உலக நாடுகள் வெறுக்கின்றன. அதற்கு மூலகாரணம் மன்னர்களின் மமதையும் மதியீனமும்தான். மக்களின் சிறிய உரிமைகளைச் சிதைத்த மன்னர்கள் இறுதியில் அரசை மாத்திரமல்ல, சிரசையும்கூட இழந்திருக்கிறார்கள்.

அப்படி இருந்தும் இன்று உலகிலேயே சகிக்க முடியாத பிற்போக்கான நிர்வாகத்துக்கு இந்திய சமஸ்தானங்கள் முதல் ஸ்தானம் வகித்து வருவதுதான் வேடிக்கையாகும். எனினும், அதற்கு விலக்காகச் சில சமஸ்தானங்களின் நிர்வாகம் மாத்திரம் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. டம்பாச்சாரிகள் என வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்ற இந்திய மன்னர்களின் மண்டலத்தில் அத்தி பூத்தாற்போன்று உத்தம தேச பக்தர்களும் இருக்கிறார்கள்.

அரசியல் நிர்ணய சபைக்கும் தேச முன்னேற்றத்துக்கும் மன்னர்கள் மண்டலம் போட்டிருந்த மகா முட்டுக்கட்டையைச் சமீபத்தில் உடைத்தெறிந்து அவர்களுக்கு நேர்மையான வழியைக் காட்டிய பரோடா திவானையும் அவருக்கு ஆதரவளித்த பரோடா மகாராஜாவான கெய்க்வாரையும் தேச மக்கள் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தேசிய விஷயங்களில் எப்போதுமே பரோடா மற்ற சமஸ்தானங்களுக்கு வழிகாட்டி வந்திருக்கிறது. தற்போதைய பரோடா மகாராஜாவின் தந்தை சிறந்த தேசபக்தர். முதன் முதலாகக் கட்டாயக் கல்வி முறையைத் தமது சமஸ்தானத்தில் அமுலுக்குக் கொண்டு வந்து அகில இந்தியாவுக்கும் வழிகாட்டியவர். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் எஜமானர்களுக்குச் சலாம் போடும் சமஸ்தானாதிபதிகள் இன்னும் இருக்கிறார்கள். ஆனால் பரோடா மகாராஜாவின் பரம்பரை அப்படியல்ல.

ஏழாம் எட்வர்ட் பட்டாபிஷேக வைபவத்தையொட்டி 1903-ம் வருஷம் டில்லியில் வைஸ்ராய் லார்டு கர்ஸன் ஒரு தர்பார் நடத்தினார். தர்பாருக்கு விஜயம் செய்திருந்த பெரிய பெரிய பேர்வழிகளும் மகாராஜாக்களும் கூட வெளியே செல்லும்போது முதுகுப் புறத்தைக் காட்டிக் கொண்டு செல்லக் கூடாது; தர்பாரைப் பார்த்தபடி பின்புறமாகத்தான் நடந்து வெளியே செல்ல வேண்டும். மேற்படி சம்பிரதாயத்துக்கு விரோதமாக எவரும் நடக்கவில்லை. ஆனால் கெய்க்வார் மகாராஜா மாத்திரம் மகா துணிச்சலுடன் மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் பிரதிநிதியான வைஸ்ராய் கர்ஸனுக்கு முதுகுப் புறத்தைக் காட்டிக் கொண்டு வெளியே சென்றார். அந்த 'அபசார'த்தைப் பார்த்ததும் தர்பாரில் வீற்றிருந்தவர்களுக்குத் தலைகள் சுழன்றன; கர்ஸன் பிரபுவின் கண்களிலிருந்து தீப்பொறிகள் பறந்தன. அதன் விளைவாக, கெய்க்வார் ராஜ்யத்தையும் சிம்மாசனத்தையும் இழக்கப்போகிறார் என்றுகூட எங்கெங்கும் முணுமுணுப்புகள் பலமாக இருந்தன. எனினும் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள பிரிட்டிஷ் சர்க்கார் துணியவில்லை.

அதே பரோடா மகாராஜாவின் புதல்வர்தான் இன்று, மன்னர்களின் உரிமை என்பது இந்தியாவின் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போடுவதல்ல என்று கூறி, மன்னர்களின் மதி மயக்கத்தைத் தெளிய வைத்திருக்கிறார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

அக்கப் போர்

"சக்கைப்போடு"

நமது அபார கருணை மிக்க கவர்னர் துரை நை அவர்களின் பிரமாத அருள் மிகுந்த மனைவியார் நை மோட்டி அவர்கள் விருதுநகருக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தில் வீடு வீடாகப் புகுந்து க்ஷேமம் விசாரித்தாராம். ஒரு வீட்டிலிருந்த ஸ்திரீ, தான் ஒரு போலீஸ் கான்ஸ்டபிளின் மனைவி என்று தெரியப்படுத்தினாராம். அந்த அம்மாளின் குமாரனைப் பார்த்து லேடி நை, "நீயும் உன் தகப்பனார் போல் கான்ஸ்டபிள் உத்தியோகத்துக்கு வர வேண்டும்! தெரியுமா?" என்றாராம். அந்தப் பிள்ளையாண்டான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்; அப்பேர்ப்பட்ட கவர்னர் துரைசாணி அம்மாளின் வாயினால், "ஹெட் கான்ஸ்டபிள் உத்தியோகத்துக்கு வர வேண்டும்!" என்ற ஆசீர்வாதத்தையாவது அவன் பெற்றிருக்கக் கூடாதா?

★

அதே நிலைமையில் மேற்படி கான்ஸ்டபிளின் மனைவியார் அவ்வளவு தரித்திர புத்தி காட்டியிருக்க மாட்டார் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

அதாவது, அந்த அம்மாள் கவர்னர் துரையின் மாளிகைக்குப் போயிருந்து, அங்கே கவர்னரின் சின்ன மகனைப் பார்த்திருந்தால், "நீ உன் அப்பாவைப் போல் கவர்னர் பதவிக்கு வந்தால் போதாது; கவர்னர் ஜெனரல் பதவிக்கு வந்துவிட வேண்டும்!" என்று சொல்லியிருப்பார்!

ஆனால் நை மோட்டியின் வாக்கு ஒரு வேளை பலிக்கக் கூடும். கான்ஸ்டபிளின் குமாரன் தானும் ஒரு கான்ஸ்டபிளாக வரலாம்.

கான்ஸ்டபிள் மனைவியின் ஆசீர்வாதமோ வீணாய்த்தான் போகும்! லார்டு மவுண்ட் பேட்டன் இந்தியாவின் கடைசி வைசிராய் என்றுதான் தீர்ந்து போய்விட்டதே!

★

ஆசிரியர்களின் புதிய சம்பள விகிதங்களைப் பற்றி நாடெங்கும் கிளர்ச்சி நடக்கிறதல்லவா? அதைக் குறித்துச் சென்னை சர்க்கார் விடுத்திருக்கும் அறிக்கையில், "புதிய சம்பளத் திட்டத்தை உபாத்தியாயர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாதபடியாலே தான் இப்படிக் கிளர்ச்சி செய்கிறார்கள்!" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வேண்டும், வேண்டும்! ஆசிரியர்களுக்கு நன்றாக வேண்டும்! வகுப்பில் சுமாராயிருக்கும் பையன்களைப் பார்த்து உபாத்தியாயர்கள், "என்னடா, அப்பா! நான் சொல்வது நுழைந்ததா? அல்லது வால் மட்டும் நுழையவில்லையா?" என்று எகத்தாளம் செய்வதுண்டல்லவா?. இப்போது உபாத்தியாயர்களைப் பார்த்துச் சர்க்கார் அதே மாதிரி எகத்தாளம் செய்கிறார்கள். "எங்கள் திட்டத்தை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை!" என்கிறார்கள்.

"புரிந்துகொள்ள முடியாத திட்டத்தை ஏன் வெளியிட்டீர்கள்?" என்று ஆசிரியர்கள் திருப்பிக் கேட்கவும் முடியாது. ஏனென்றால், "உங்களிடம் படித்ததினால் தான்!" என்று சர்க்கார் மந்திரிகள் பதில் சொல்லி விடலாம் அல்லவா?

★

திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்கள் திருச்சி நேஷனல் காலேஜ் வைபவத்துக்கு வந்தபோது காலேஜ் வாசலுக்கருகில் மாணாக்கர்கள் சிலர் நின்றுகொண்டு கறுப்புக் கொடி பிடித்து, "திரும்பிச் செல்க!" என்று ஆர்ப்பாட்டம் செய்தார்களாம்.

மேற்படி வைபவத்தில் ஸர் ஸி. பி. பேசிய போது, "மாணாக்கர்கள் கொஞ்சம் அதிக உற்சாகமாயிராவிட்டால், அவர்கள் மாணாக்கர்கள் அல்ல. அரசியலைப் பற்றி அவர்கள் வேண்டிய வரையில் பேசலாம், விவாதிக்கலாம். ஆனால் கலாசாலையின் நாலு சுவர்களுக்கு உட்புறத்திலேயே அவர்களுடைய அரசியல் உற்சாகம் அடங்கியிருக்க வேண்டும்!" என்றாராம்.

ஆகவே, காலேஜுக்கு வெளியில் நின்று கறுப்புக் கொடி பிடித்த மாணாக்கர்கள் தங்கள் தவறை உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறோம். காலேஜின் நாலு

தவர்களுக்கு உள்ளேயே நின்று மாணுக்கர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தால் ஸர் ஸி. பி. ஆட்சேபித்திருக்க மாட்டார்; ஒருவேளை பாராட்டிக்கூட இருப்பார்!

★

சென்ற இதழ் அக்கப்போரில், ஸ்ரீ டி. பிரகாசம்காரு சானடே ஹாலில் செய்த பிரசங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது அல்லவா?

அதற்கும் தற்போதைய நிலைமைக்கும் என்ன சம்பந்தம் என்று ஒரு நேயர் கேட்கிறார்.

சம்பந்தம் என்னவென்றால், ஸ்ரீ டி. பிரகாசம் எப்பேர்ப்பட்ட நிலைமையையும், சமாளிக்கக் கூடியவர் என்பதுதான்.

கட்சிக் கூட்டத்தில் "நம்பிக்கையில்லை"ப் பிரேரணை வந்தால், "நம்பிக்கையில்லையா! ஏன் இல்லை? எல்லாம் இருக்கிறது, போங்கள்!" என்று ஸ்ரீ பிரகாசம் காரு சொல்லி நிலைமையைச் சமாளிக்கக் கூடும்.

அல்லது "நம்பிக்கை உண்டு, இல்லை என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? எனக்கல்லவா தெரியும்? இதோ என் சட்டைப் பைக்குள்ளே நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிறேன், தெரியுமா?" என்றும் சொல்லலாம். அவர் தம்முடைய சட்டைப் பையில் நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்தால் நமக்கு ஆட்சேபமில்லை. மற்றவர்களின் சட்டைப் பையிலேதான் நம்பிக்கையை வைக்கக் கூடாது!

★

ஸ்ரீ பிரகாசம்காரு தம்மிடம் ஒரு கோடி சொச்சம் கையெழுத்து இருப்பதாகச் சொல்லக் கூடும் என்று சென்ற இதழில் எழுதியிருந்ததல்லவா? அதற்குப் பொருத்தமான ஒரு உபமானக் கதையை நேயர் ஒருவர் ஞாபகப்படுத்தியிருக்கிறார்.

'கோடி கன்னிகா தானம் குப்பண்ண பந்துலு' என்று ஒருவர் இருந்தாராம். "அவருக்குக் 'கோடி கன்னிகா தானம்' என்ற பட்டப் பெயர் எப்படி வந்தது? ஒருவர் கோடி கன்னிகைகளைக் கன்னிகா தானம் செய்து கொடுத்திருக்க முடியுமா?" என்று ஸ்ரீமான் சந்தேக விளக்கம் செட்டியார் கேட்டாராம்.

இதற்கு விஷயம் தெரிந்த மனுஷர் ஒருவர், "அப்படி இல்லைங்காணும்! மேற்படி குப்பண்ண பந்துலுவின் மூதாதை ஒருவருக்குத் தனகோடி என்ற பெயருள்ள பெண் ஒருத்தி இருந்தாள். அந்தக் காலம், பெண்ணுக்குப் பரிசம் வாங்குகிற காலம். ஆயினும் அவர் தனகோடி என்னும் தமது மகளைப் பணம் வாங்கிக் கொள்ளாமல் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். அது காரணமாகவே 'கோடி கன்னிகாதானம்' என்ற பட்டப் பெயர் அந்த வம்சத்துக்கு ஏற்பட்டது!" என்று விளக்கப் படுத்தினாராம்.

★

அக்கப்போர் உலகத்தில் பின்வரும் வசன கவிதை இப்போது பலருடைய நாவிலும் தாண்டவமாடி வருகிறது:—

"ஆந்திரகேசரி பிரகாசம்காரு
தந்திரம் ரொம்பச் செய்தாரு!
மந்திரி வேலை பார்த்தாரு!—இப்போ
வந்தபடி போகப் போறாரு!"

மேற்படி மகா மகா கவியின் வாக்கு எவ்வளவு தூரம் பலிக்கப் போகிறதோ?

★

இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் அரசியல் நிர்ணய சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. பாகிஸ்தானுக்குத் தனியான அரசியல் நிர்ணய சபை வேண்டும் என்று ஜனாப் ஜின்னா கோருகிறார்.

ஹைதராம், மைசூர், திருவாங்கூர் சமஸ்தானங்களில் அரசியல் நிர்ணய சபை வேண்டுமென்ற கிளர்ச்சி ஆரம்பமாகியிருக்கிறது.

புதுக்கோட்டை, உடையார் பாளையம் சமஸ்தானங்களில் அரசியல் நிர்ணய சபைக் கிளர்ச்சி ஆரம்பமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இசையாக கலையாக கவியாக சமஸ்தானங்களிலும், மொழி பெயர்ப்பு மன்னரின் சாம்ராஜ்யத்திலும், பீடி சக்கரவர்த்தியின் ஏகாதிபத்தியத்திலும் கூடிய சீக்கிரம் அரசியல் நிர்ணய சபைக் கிளர்ச்சியை எதிர்பார்க்கலாம்.

★

மீன் உருவத்தில் யாத்திரை செய்யும் அமெரிக்கக் கடற்படைக் கோஷ்டியார், பதினைந்து புதிய தீவுகளைக் கண்டு பிடித்திருக்கிறார்களாம்.

அவற்றில் ஏழரைத் தீவுகள் பாகிஸ்தானில் சேரவேண்டும் என்பதாக ஜனாப் கஸ்னவர் அலிகான் அவசரத் தந்தி கொடுத்திருக்கிறாராம்.



நவகாளியில் மகாத்மா

★ ★ ★ சென்ற வருஷக் கடைசியில் நவகாளி திப்பெரா ஜில்லாக்களில் மத வெறியர்களின் ஆவேசம் காரணமாக நடந்த அக்கிரமங்களையும் அட்டூழியங்களையும் கேட்டு காந்தி மகான் மனம் பொருமி மட்டற்ற வேதனைக்குள்ளானார். உடனே, மேற்படி ஜில்லாக்களில் சமரசத்தையும் சகோதரப்பாவத்தையும் வளர்க்கும் பொருட்டு அஹிம்சா யாத்திரை தொடங்கினார்.



மகாத்மாஜி கிராமம் கிராமமாகக் கால் நடையாக யாத்திரை செய்து அன்பு மதத்தைப் பரப்பி வருகிறார். மகாத்மா தமது யாத்திரா மார்க்கத்தில் தினந்தோறும் செய்து வரும் பிரார்த்தனையின் போது ஆயிரக் கணக்கான கிராமவாசிகள் கூடுகிறார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஆண் பெண் அனைவரும் குடும்பத்தோடு மகாத்மாவின் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுகிறார்கள். காந்தி மகானுடைய நல்லுபதேசத்தைக் கேட்டுத் தங்களுக்குள் பரஸ்பரம் சகோதர பாவத்தை வளர்த்து வருகிறார்கள். அத்தகைய அவருடைய அபூர்வ கிராம யாத்திரைக் காட்சிகளையும் பிரார்த்தனைக் காட்சியையும் இங்கே காணலாம்.









நவகாளி யாத்திரை

சாவி

'ஊ ஊ' கோஷம்!

மகாத்மாவைப் பின்பற்றிச் செல்லும் அந்த அபூர்வ காவைப் பற்றின சுவாரஸ்யமான சரிதை முடிவதற்கும் நாங்கள் பிரார்த்தனை மைதானத்தை நெருங்குவதற்கும் நேரம் சொல்லி வைத்தாற்போல் இருந்தது. பிரார்த்தனை ஸ்தலத்துக்குள் பிரவேசித்ததும் எனக்கு ஒரே வியப்பும் திகைப்பும் ஏற்பட்டது.

ஏனெனில், பிரார்த்தனை மைதானத்தில் கூடியிருந்த அத்தனை பெண்மணிகளும் ஒன்று சேர்ந்து, அழுகிற குழந்தையைத் தொட்டிலிலே போட்டு விளையாட்டுக் காட்டுவதுபோல் "லுலுலு" என்று சப்தம் செய்தார்கள்! மேற்படி விசித்திரமான "ஊஊ" கோஷம் இரண்டு நிமிஷ நேரம் இடைவிடாமல் நடந்தது.

இந்த அதிசயத்தைப் பற்றி அருகிலிருந்தவர்களிடம் விசாரித்தேன். அதற்கு அவர்களில் ஒருவர் "சாதாரணமாக முஸ்லிம் ஸ்திரீகள் தங்களுடைய மதகுருக்களைக் காணும்போதும், மகான்களைத் தரிசிக்கும்போதும் மட்டுமே இத்தகைய அபூர்வத்வனியை உண்டாக்குவார்கள். இதற்கு இங்கே 'ஊலுத்வனி' என்று கூறுவார்கள். இவ்வாறு அவர்கள் சப்தப்படுத்துவது முஸ்லிம் மாதர்களுக்கு மகாத்மாஜியிடம் உள்ள அன்பையும், பக்தியையும், மரியாதையையும் காட்டுகிறது. இதிலிருந்து மகாத்மாஜி இங்குள்ள முஸ்லிம்களுடைய மனதை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறார் என்பதைத் தாங்கள் ஊகித்துக் கொள்ளலாம்" என்றார்.

பிரார்த்தனை வேளையில்......

காந்திஜி பிரார்த்தனை மேடையில் ஏறியதும், கண்களை மூடி மூன்று நிமிஷ நேரம் தியானத்திலே ஈடுபட்டிருந்தார். தியானம் முடிந்ததும் வழக்கப்படி குரான், கீதை இவற்றிலிருந்து சில சுலோகங்கள் படிக்கப்பட்டன. அப்புறம் காந்திஜி தமது பிரார்த்தனைப் பிரசங்கத்தை அரை மணி நேரம் ஹிந்தி பாஷையிலே புரிந்தார். அவர் ஹிந்தி பாஷையிலே புரிந்த பிரசங்கம் எனக்கு அவ்வள

வாகப் புரியவில்லை. அடுத்தபடியாக, மகாத்மாஜியின் பிரசங்கத்தை ஸ்ரீ நிர்மல் குமார்போஸ் வங்காளியிலே மொழிபெயர்த்தார். அது எனக்கும், மகாத்மாஜிக்கும் இருவருக்குமே விளங்கவில்லை. இது விஷயத்தில் மகாத்மாஜிக்கும் எனக்கும் உள்ள ஒற்றுமையை நினைத்துப் பெருமைப் பட்டேன்.

* * *

மொழி பெயர்ப்பு நடைபெறும் முக்கால் மணி நேரத்தை வீணாக்காமல் மகாத்மாஜி தம் கையோடு கொண்டு வந்திருந்த ஒரு நோட்டுப் புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். என்ன எழுதுகிறார் என்று எட்டிப் பார்த்தேன். ஏதோ ஆங்கிலத்தில் கிறுக்கிக் கொண்டிருந்தார். மகாத்மாவின் எழுத்து சாக்ஷாத் பிரம்ம தேவனுடைய எழுத்தையே ஒத்திருந்தது! காந்திஜிக்குத் தினமும் பல இடங்களிலிருந்து, பல பேர் பல பிரச்னைகளைப் பற்றிக் கேள்விகள் கேட்டுக் கடிதம் எழுதுகிறார்கள் அல்லவா? அவைகளுக் கெல்லாம் அவர் மறுதினம் பிரார்த்தனை வேளையின் போது பதில் எழுதி வைத்து விடுகிறார். அந்தக் கேள்விகளையும் பதில்களையும் இரவு பத்திரிகை நிருபர்கள் முகாமுக்கு அனுப்பிவைக்கிறார். நிருபர்கள் அதைப் படித்து 'டைப்' செய்து செய்தி ஸ்தாபனங் களுக்கு அனுப்பி விடுகிறார்கள். மறுநாள் அந்தச் செய்தி உலகத் தின் பல பாகங்களுக்கும் வாயுவேகத்தில் பரவி விடுகிறது.

பாதரட்சை விஷயம்

தினமும் பிரார்த்தனை முடிந்த பிறகு காந்திஜி சிறிது நேரம் வயல் வெளிகளில் உலாவி விட்டுத் தமது குடிசைக்குத் திரும்புவது வழக்கமாம்.

அன்று ஸ்ரீநகரில் பிரார்த்தனை முடிந்ததும் மகாத்மாஜியுடன் உலாவுவதற்கு இன்னும் சிலரும் சென்றார்கள். நானும் கும்பலோடு சேர்ந்துகொண்டேன். உலாவும்போது காந்திஜியின் பாதங்களைக் கவனித்தேன். அப்போதுதான் காந்திஜியின் பாதங்களில் புண் என்கிற விஷயம் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. இருந்தாலும் மகாத்மாஜி அதைச் சற்றும் பொருட் படுத்தாமல் காடு மேடுகளை யெல்லாம் காலில் செருப்பு அணியாமலே நடந்து கொண்டிருந்தார். காந்தி மகான் வெறுங் காலுடன் நடந்து போகும் காட்சியைக் கண்ட போது மனம் சொல்லொணாத வேதனைக் குள்ளாயிற்று. "ஆஹா! உலகம் போற்றும் உத்தமரான காந்திமகான் கல்லிலும் முள்ளிலும் பனித்துளிகள் நிறைந்த சில்லென்ற களி மண் தரை யிலும் கால் கடுக்க நடந்து செல்லும்போது நாம் மட்டும் செருப்புடன் நடந்து செல்வதா?" என்று ஓர் எண்ணம் உண்டாயிற்று. தட்சணமே என்னுடைய காலிலிருந்த செருப்புக்களைக் கழற்றிக் கையிலிருந்த கித்தான் பைக்குள் போட்டுக் கொண்டேன். (என்னுடைய செருப் புக்களில் ஒன்று அந்தச் சமயம் அறுந்து போயிருந்த தென்பதை யும், அது என்னுடன் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியிருந்த தென்பதையும் நேயர்களுக்குக் காதோடு சொல்லி வைக்கிறேன்!)

வாபஸ் ஆனார்!

போகும் வழியில்தான் "மகாத்மாஜி ஏன் செருப்பு அணிவ தில்லை?" என்று மாணிக்கவாசகத்தைக் கேட்டேன்.

"மகாத்மாவிடம் பரம பக்திகொண்ட பஞ்சாபி ஸோல்ஜர் ஒருவர் ஒரு தடவை மகாத்மாஜியைத் தரிசிப்பதற்காக நவகாளிக்கு வந்திருந் தார். காந்திஜி வெறுங்காலுடன் யாத்திரை செய்கிறார் என்பதைப் பத்திரிகைகளிலே படித்த அந்த அன்பர் மகாத்மாவின் உபயோகத்





இயற்கைக் காட்சிகள் நிறைந்த நவகாளி ஜில்லாவின் ஒரு தோற்றம். தோப்புக்குள்ளே நடந்து செல்பவர்கள் மகாத்மாவுக்குக் காவலாக வந்துள்ள இரு வங்கப் போலீஸ் வீரர்கள்.

றுக் சென்று கையோடு ஒரு ஜதைப் பாதரட்சைகளையும் வாங்கி வந்திருந்தார். அந்தப் பாதரட்சைகளை மகாத்மாவிடம் தந்து, 'தாங்கள் இதை அணிந்து கொள்ள வேண்டும். இது தங்களுக்கு நான் இடும் அன்புக் கட்டளை' என்றார்.

காந்திஜி சிரித்துக் கொண்டே 'ஏன்?' என்று கேட்டார்.

'தாங்கள் இந்த தேசத்தின் நாற்பது கோடி மக்களுக்கும் பொதுச் சொத்து. தங்களுடைய விருத்தாப்பிய தசையில் இப்படிச் செருப்பின்றி வெறுங் காலுடன் நடந்து செல்வதை நாங்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம். இது விஷயத்தில் தங்களுடைய இஷ்டப்படி விட நாங்கள் தயாராயில்லை; ஆகையால் தாங்கள் இதை அணிந்து கொண்டுதான் ஆகவேண்டும்' என்று ஒரு போடு போட்டார். ஆனால் அதற்கு மகாத்மா, 'இந்தியாவின் நாற்பது கோடி மக்களும் ஒரு ஏழை எளியவர்கூடப் பாக்கி இல்லாமல் செருப்பு அணிந்து கொள்ளும் காலம் ஏற்படும்போது நானும் அணிந்து கொள்வேன்; அதுவரை வெறுங் காலுடனேதான் நடப்பேன்' என்று கண்டிப்பாக மறுதளித்து விட்டார்.

எனவே, அந்தப் பஞ்சாபி வேல்ஜர் அதற்கு மேல் பேச வழியின்றி மகாத்மாஜியிடமிருந்து வெற்றிகரமாக வாபஸ் ஆனார்" என்று மாணிக்கவாசகம் கதையை முடித்தார். இதற்குள் பொழுது போய் விட்டதால் நாங்களும் குடிசைக்கு வெற்றிகரமாக வாபஸ் ஆனோம்.

இருளும் குளிரும்

சூரியன் மேற்குத் திசையில் மறைந்த போது மகாத்மாவும் தமது குடிசைக்குள் மறைந்து விட்டார். அஸ்தமித்ததும் கொஞ்சம் கொஞ்சமாகக் குளிர ஆரம்பித்தது. நவகாளி ஜில்லாவில் இருளும் குளிரும் சேர்ந்து ஆட்சி புரிவதைப் போல் நான் எங்குமே கண்டதில்லை. அந்தக் கன்னங் கரிய இருட்டில் மெதுவாக என்னுடைய நீண்ட கம்பளிக் கோட்டை எடுத்துப் போட்டுக் கொண்டேன். பொல்லாத குளிர் அதை எப்படியோ கண்டு பிடித்து விட்டது! மெதுவாக என் கையை வந்து ஜிலென்று கவ்வியது. சட்டென்று உடனே கையைச் சட்டைப் பைக்குள்ளே போட்டுக் கொண்டேன். காலில் ஏதோ ஜில்லென்று உறைத்தது. காலைப் போர்த்திக் கொண்டேன். முகத்திலே ஜிலு ஜிலுப்புத் தட்டியது. 'மப்ளரை' எடுத்துக் கட்டினேன். குளிர் எப்படியோ அந்த இருட்டில் கோட்டுக்குள்ளே புகுந்து உடம்பைக் குலுக்கிக் குலுக்கி எடுத்தது.

காந்திஜி இந்தக் குளிரை எப்படிச் சமாளிக்கிறார் என்று பார்ப்பதற்காக அவர் தங்கியிருந்த குடிசைக்குள் சென்று பார்த்தேன். மகாத்மாஜியை அங்கே காணவில்லை. நாலா மூலைகளிலும் தேடிப் பார்த்தேன். ஊஹூம்; காணவேயில்லை. அப்புறம் விசாரித்ததில் காந்திஜி ஒரு கம்பளிக்குள் புகுந்து கொண்டு நன்றாக உறங்கிக்கொண்டிருப்பார் என்று சொன்

னார்கள். விடியற்காலம் பார்த்ததில் கிழமாகவே மகாத்மாஜி ஒரு கம்பளிக்குள்தான் உறங்கிக் கொண்டிருந்தார்!

பரிசு வகைகள்

சில காலத்துக்கு முன்னால் வங்காள கவர்னரா யிருந்த கேஸி துரை ஒருசமயம் மகாத்மாவைப் பேட்டி காண வந்தபோது மேற்படி கம்பளத்தை மகாத்மாவுக்குப் பரிசாக வழங்கினாராம். அந்த விலை உயர்ந்த கம்பளத்தைத்தான் காந்திஜி அன்று முதல் போர்வையாக உபயோகித்து வருகிறாராம்.

மகாத்மாவுக்கு இப்படி அடிக்கடி அநேக பரிசுகள் கிடைக்குமாம்!

சென்ற கிறிஸ்துமஸ் தினத்தன்று கூட அவருக்குச் சில பரிசுகள் வந்தனவாம். காந்திஜியை ஏசுநாதர் பிறந்த தினத்தன்று தரிசிப்பதற்காகச் சில வெள்ளைக்கார சோல்ஜர்கள் ஸ்ரீராம்பூருக்கு வந்திருந்தார்கள். பிரார்த்தனை மேடையில் அவரைக் கண்டு அவரிடம் ஏதேதோ சாமான்கள் நிறைந்த ஒரு பெரிய அட்டைப் பெட்டியைச் சமர்ப்பித்தார்கள்.

மகாத்மாஜி அந்தப் பெட்டியைத் தம் முன்னே எடுத்து வைத்துக் கொண்டு திறந்து பார்த்தார். முதன் முதலாக மகாத்மாஜி பெட்டிக்குள்ளே கையை விட்டதும் சில அபூர்வ சாமான்கள் வெளியே வந்தன! அவற்றைக் கண்டதும் மகாத்மாவுக்கும் மற்றவர்களுக்கும் சிரிப்புத் தாங்கவில்லை; காரணம் எல்லாம் சிகரெட் பாக்கெட்டுகள்!

'உயர்ந்த சிகரெட்டுகளைக் கண்டால் நேருஜிக்கு ரொம்பப் பிடிக்கும். ஆகையால் இந்த சிகரெட்டுகளை ஜாக்கிரதையாக வைத்திருந்து நேருஜி இங்கே வரும்போது கொடுக்கப் போகிறேன்' என்றார் மகாத்மா.

பின்னர் மறுபடியும் கையை விட்டார். வாசனை சோப்புகளும், தந்தத்தால் தயார் செய்த சீட்டுக் கட்டு ஒன்றும் வந்தன.

'இதெல்லாம் எனக்குப் பிரயோஜனமில்லை. நான் சோப்புப் போட்டுக் குளிப்பதில்லை. சீட்டாடவும் எனக்குத் தெரியாது!' என்று வருத்தப்பட்டுக் கொண்டே மறுபடியும் பெட்டிக்குள் கையை விட்டார். இந்தத் தடவை ஒரு 'டார்ச் லைட்' வந்தது!

'இது எனக்கு ரொம்பவும் அவசியமானதுதான்! இதை நானே வைத்துக் கொள்ளப் போகிறேன்' என்று சொல்லி அதை எடுத்துப் பத்திரமாக மடிக்குள்ளே வைத்துக் கொண்டார். மகாத்மாஜி அன்று முதல் மேற்படி டார்ச் லைட்டைத் தான் உபயோகித்து வருகிறார்.

மகாத்மாவைப் பற்றின பல அபூர்வ சம்பவங்களைப் பற்றியும் அவர் தமது யாத்திரா மார்க்கத்தில் கண்டு வந்த பல முக்கியக் காட்சிகளைப் பற்றியும் அங்குள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். காந்தி மகாத்மாவின் கதைகளைக் கேட்கக் கேட்க மேலும் மேலும் கேட்டுக் கொண்டே இருக்கத்தான் தோன்றியது.

கேள்வியும் பதிலும்

அவதார புருஷரான காந்தி மகான் தமது அஹிம்ஸா யாத்திரையின் நோக்கம் என்ன வென்பதைப் பற்றியும் தம்முடைய நோக்கம் வெற்றி பெறாவிட்டால் அதற்கு யார் பொறுப்பாளி என்பதைப்பற்றியும் கொஞ்ச தினங்களுக்கு முன் ஒரு இடத்தில் விரிவாக எடுத்துச் சொன்னாராம். அது வருமாறு:—

“என்னுடைய லட்சியங்களுக்குக் கீழ் வங்காளத்தில் கடும் சோதனை ஏற்பட்டிருக்கிறது. இதற்குமுன் இத்தகைய ஒரு பெரும் சோதனையில் நான் ஈடுபட்டதில்லை. இந்தப் பரீட்சையில் நான் தோற்றுவிட்டால் அது நான் கடைப் பிடித்து வரும் அஹிம்ஸா தர்மத்துக்குத் தோல்வியாகாது. அஹிம்சைக் கொள்கையை ஸ்தாபிக்க நான் கடைப் பிடித்த முறைதான் தோல்வி



அடைந்ததாகும். ஆகவே, நான் இப்போது தோல்வி அடைந்தாலும் பிற்காலத்தில் தோன்றப் போகும் உத்தமர்களும் மகான்களும் இந்த முயற்சியில் வெற்றி பெறுவார்கள் என்பது நிச்சயம்.''

மேலும் மகாத்மா மற்றொரு விகல்பமான சந்தேகத்துக்கும் பதில் கூறிய விவரத்தையும் எடுத்துச் சொன்னார்கள்.

அதாவது, மகாத்மாவின் மாசு மறுவற்ற தூய வாழ்க்கையில் சந்தேகம் கொண்ட ஒரு துராத்மா கடிதத்தின் மூலம் ஒரு சந்தேகத்தைக் கிளப்பி யிருந்தாராம்.

மேற்படி கேள்வியை மகாத்மா பிரார்த்தனைக் கூட்டத்தில் எல்லோருக்கும் மத்தியில் வெளிப்படையாகப் படித்து அதற்குப் பதிலும் கூறினாராம். அது வருமாறு:—

"என்னுடைய அந்தரங்க வாழ்க்கையில் சந்தேகம் கொண்ட ஒருவர் என்னுடைய பிரம்மசரிய வாழ்க்கையில் அவநம்பிக்கை தெரிவித்திருக்கிறார். நான் எப்போதும் ஸ்திரீகளுடன் நெருங்கிப் பழகுகிறேன் என்றும், அதனால் அவருக்குச் சந்தேகமா யிருக்கிறதென்றும் குற்றம் சாட்டி யிருக்கிறார். இவரைப்போல் இன்னும் சிலர் என்மீது சந்தேகம் கொண்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். எனக்கு அந்தரங்கம் என்பது எதுவும் கிடையாதாகையால், இந்தச் சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டியது என் கடமை. கடந்த இருபது வருஷங்களுக்கு மேலாக நான் பிரம்மசரியத்தைக் கடைப்பிடித்து வருகிறேன். ஐம்புலன்களையும் அடக்கி ஆண்டு வருகிறேன். நாக்குக்கு ருசியான பண்டங்களைச் சாப்பிடுவது கிடையாது. உயிர் வாழ்வதற்கு எவ்வளவு ஆகாரம் அவசியமோ, அதைவிடக் குறைவாகவே சாப்பிட்டு வருகிறேன். என்னுடன் எந்த நேரமும் பெண்கள் இருந்து வருவது உண்மையே. பெண்களின் அருகிலேயே இருந்தும் பிரம்மசரியத்தைக் காப்பதுதான் உண்மை யோகியின் லட்சணம். காட்டிலேயே இருந்த ஒருவன் நான் ஜிலேபியே சாப்பிட்டது கிடையாது என்றால் அதில் ஆச்சரியம் கிடையாது. ஏனெனில் காட்டிலே ஜிலேபி கிடைக்காது. ஆகையால் கிடைக்காத ஒரு பொருளைச் சாப்பிட்டதில்லை என்று சொல்லுவது ஆச்சரியமாகாது. அதைப்போலவே, பெண்களின் மத்தியில் இருந்து பிரம்மசரிய வாழ்க்கையில் வெற்றி பெறுவதுதான் உண்மையான வெற்றியாகும். இதில் நான் பரிபூரண வெற்றி அடைந்திருக்கிறேன்."

தர்மபூர் மார்க்கம்

மறுநாள் கீழ்வானத்தில் சூரியன் உதயமாகித் தனது பிரயாணத்தைத் தொடங்கியதுதான் தாமதம், மகாத்மாஜியும் தமது குடிசையிலிருந்து உதயமாகித் தம்முடைய யாத்திரையை ஆரம்பித்து விட்டார். அன்று ஸ்ரீநகரிலிருந்து போகும் தர்மபூர் யாத்திரையில் காந்திஜியுடன் சுமார் நூறு பேருக்குமேல் நடந்து வந்தார்கள். மனு காந்தியும் மற்றவர்களும் வழி நடைப் பிரயாணத்தின் அலுப்புத் தெரியாமலிருப்பதற்காக மகாகவி தாகூரின் கவிகளை நடைக்கு ஏற்ற மெட்டுப் போட்டுப் பாடிக் கொண்டே வந்தார்கள்.

மகாத்மாஜி கவிதைகளை ரசித்துக் கொண்டே கைக்கோலை ஊன்றி வேகமாக நடந்து சென்றார். உடன் வருபவர்கள் மகாத்மாவின் வேகத்துக்குச் சரியாகத் தங்களுடைய வேகத்தைச் சரிக்கட்டுவதற்காகக் கொஞ்ச தூரம் ஓடியும், கொஞ்ச தூரம் விரைவாக நடந்தும் சென்றார்கள்.

மகாத்மாஜி நடந்து செல்லும் மார்க்கத்திலுள்ள வரப்புகளையெல்லாம் கிராமவாசிகள் நன்றாகச் செப்பனிட்டு அகலப்படுத்தி வைத்திருந்தனர். அங்கங்கே வரப்பின் இரு பக்கங்களிலும், மூங்கில் பாலங்கள் உள்ள இடங்களிலும் தலைக்கு மேல் உயரமான வளைவுகள் கட்டி அவற்றைப் பச்சிலைக் கொடிகளைக் கொண்டு ஜோடித்து வைத்திருந்தார்கள். சில வளைவுகளில் "ஸ்வாகதம்" "வெல்கம்" "பாபுஜி! ஆயியே!" போன்ற வரவேற்பு வாசகங்களும் காணப்பட்டன.

நவகாளி ஜில்லாவின் இயற்கை அமைப்பு மகாத்மாவின் கிராம யாத்திரைக்கு மிகவும் ஒத்ததா யிருக்கிறது. தென்னை, மா, கமுகு முதலிய ஓங்கி வளர்ந்த விருக்ஷங்களடர்ந்த தோப்புக்கள் வழி நெடுக இருக்கின்றன. இதனால் எப்போதும் எங்கேயும் குளுமையான நிழல் மகாத்மாவைக் குதூகலத்துடன் வரவேற்கிறது. இம்மாதிரியே கூப்பிடு தூரத்துக்கு ஒரு தோப்பும் அந்தத் தோப்புக்குள்ளே ஒரு நீர்த் தேக்கமும் அதைச் சுற்றிச் சில வீடுகளும் காட்சி அளிக்கின்றன. நீர்த் தேக்கத்திலே ஓடி விளையாடும் அன்னப் பட்சிகளும், தோப்புக்களிலே இனம் தெரியாத பலவித பட்சி ஜாலங்களின் இன்னிசை கானமும் அப்படியே வசீகரித்து விடுகின்றன.

(அடுத்த இதழில் முடியும்)

சோலைமலை இளவரசி



கல்கி

மனிதனும் நாயும் மறைந்த பிறகு, குமாரலிங்கம் கோட்டை மதிலின் ஓரமாக ஓடிய சிறு கால்வாய்க்குச் சென்று முகத்தையும் சிரஸையும் குளிர்ந்த தண்ணீரினால் அலம்பிக் கொள்ள விரும்பினான். அதனால் தன் மனது தெளிவடையும் என்றும், மேலே யோசனை செய்து எங்கே போவதென்று தீர்மானிக்கலாம் என்றும் எண்ணினான். அவ்விதமே கால்வாயை நோக்கிச் சென்றான்.

போகும்போது, சோலைமலை மகாராஜாவை எந்தச் சந்தர்ப்பத்திலே அவன் பார்த்தான் என்பதும், இளவரசி மாணிக்கவல்லிக்கும் அவருக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளும் திரும்பத் திரும்ப அவனுக்கு ஞாபகம் வந்து கொண்டிருந்தன.

• • •

மாறனேந்தல் மகாராஜா உலகநாதத் தேவர், சோலைமலைக் கோட்டையில் வெகு காலமாகப் பூட்டிக் கிடந்த 'சின்ன நாச்சியார் அரண்மனை'யில் சுமார் பதினைந்து தினங்கள் வசித்தார். அந்த அரண்மனை வாசம் ஒரு விதத்தில் அவருக்குச் சிறைவாசமாகத்தான் இருந்தது. சிறைவாசத்திலும் தனிச் சிறைவாசந்தான். ஆனாலும் சொர்க்க வாசத்தின் ஆனந்தத்தை அவர் அந்த நாட்களில் அநுபவித்துக் கொண்டிருந்தார். பகலெல்லாம் அந்த அரண்மனைச் சிறையின் மேல் மாடத்தில் அவர் அங்குமிங்கும் நடந்து கொண்டிருப்பார். அவருடைய கால்கள் நடந்து கொண்டிருக்கையில் உள்ளம் என்னவெல்லாமோ ஆகாசக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டிருக்கும்.

ஒரு குறிப்பிட்ட பலகணியின் அருகே அவர் அடிக்கடி வந்து நின்று எதிரே தோன்றிய பெரிய அரண்மனையை நோக்குவார். அந்த அரண்மனையின் மேல் மாடி முகப்பில் சில சமயம் ஒரு பெண் உருவம் உலாவிக் கொண்டிருக்கும். இளவரசி மாணிக்கவல்லி தமக்காகவே அங்கு வந்து நிற்கிறாள், உலாவுகிறாள் என்பதை எண்ணும் போதெல்லாம் அவருடைய உள்ளம் துள்ளிக் குதிக்கும்.

தினம் மூன்று வேளையும் வீரம்மா அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு புறப்படுவாள்; சின்ன அரண்மனைக்கு ஒழுங்காகச் சாப்பாடு கொண்டுவந்து வைத்து விட்டுப் போவாள்.

சூரியன் அஸ்தமித்து இரவு ஆரம்பித்ததோ இல்லையோ, சிறைக் கதவு திறக்கப்படும். உடனே உலகநாதத் தேவர், கோதண்டத்திலிருந்து கிளம்பிய இராமபாணத்தைப் போல் நேரே வஸந்த மண்டபத்துக்குப் போய்ச் சேருவார். சீக்கிரத்திலேயே மாணிக்கவல்லியும் அங்கு வந்து விடுவாள். அப்புறம் நேரம் போவதே அவர்களுக்குத் தெரியாது. வருங்காலத்தைப் பற்றி எத்தனையோ மனோராஜ்ய இன்பக் கனவுகளைக் கண்டார்கள், இடை

யிடையே ஒருவரை யொருவர் 'நேரமாகி விட்டது' பற்றி எச்சரித்துக் கொள்வார்கள். எனினும், வெகு நேரம் சென்ற பிறகுதான் இருவரும் தந்தம் ஜாகைக்குச் செல்வார்கள்.

இப்படி ஒவ்வொரு தினமும் புதிய புதிய ஆனந்த அநுபவங்களை அவர்களுக்குத் தந்துவிட்டுப் போய்க் கொண்டிருந்த காலத்தில், ஒரு நாள் பகல் வேளை முழுவதும் இளவரசியை அரண்மனை மேல் மாடி முகப்பில் காணாதபடியால் உலகநாதத் தேவர் ஏமாற்றமும் கவலையும் அடைந்தார். அஸ்தமித்த பிறகு வழக்கம்போல் வஸந்த மண்டபத்துக்குப் போய் அவர் காத்திருந்ததும் வீணாயிற்று. ஏதேதோ விவரமில்லாத பயங்களும் கவலைகளும் மனதில் தோன்றி அவரை வதைத்தன. மனதைத் துணிவு படுத்திக் கொண்டு பெரிய அரண்மனைக்குச் சமீபமாகச் சென்று தீபவெளிச்சம் தெரிந்த ஒரு பலகணியின் அருகே மறைந்து நின்றார். இருவர் பேசும் குரல்கள் கேட்டன. ஒரு குரல் மாணிக்கவல்லியின் இனிமை மிக்க குரல்தான். இன்னொரு ஆண் குரல் அவளுடைய தகப்பனாரின் குரலாகத்தான் இருக்க வேண்டும். அடர்த்தியான செடிகளின் மறைவிலே நன்றாக ஒளிந்து நின்றுகொண்டு பலகணியின் வழியாக உலகநாதத் தேவர் உள்ளே பார்த்தார். அவர் எதிர்பார்த்தபடியே தந்தையும் மகளும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆஹா! அவ்வளவு அழகும் சாந்த குணமும் பொருந்திய இனிய மகளைப் பெற்ற தகப்பனாரின் முகம் எவ்வளவு கடுகடுப்பாகவும் குரோதம் கொதித்துக் கொண்டும் இருக்கிறது?

இதைப்பற்றி அதிகமாகச் சிந்திப்பதற்குள்ளே, அவர்களுடைய சம்பாஷணையில் சில வார்த்தைகள் அவர் காதில் விழுந்தன. உடனே, பேச்சைக் காது கொடுத்துக் கவனித்துக் கேட்க ஆரம்பித்தார். சோலைமலை மகாராஜாவுக்கும் அவருடைய அருமை மகளுக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது:

தந்தை:—ஏது ஏது! உலகநாதத் தேவனுக்காக நீ பரிந்து உருகிப் பேசுகிறதைப் பார்த்தால், கொஞ்ச நாளில் அவனைக் கலியாணம் செய்து கொள்கிறேன் என்று கூடச் சொல்லுவாய் போலிருக்கிறதே!

மகள்:—நீங்களுந்தான் அடிக்கடி எனக்கு மாப்பிள்ளை தேட வேண்டிய கஷ்டத்தைப் பற்றிச் சொல்லுகிறீர்கள் அல்லவா? உங்களுக்கு அந்தக் கஷ்டம் இல்லாமற் போனால் நல்லதுதானே, அப்பா!

தந்தை:—என் கண்ணே! உன் தாயார் காலமான பிறகு உன்னை வளர்ப்பதற்கு நான் எவ்வளவோ கஷ்டப்பட்டேன். அதைப் போல் இந்தக் கஷ்டத்தையும் நானே சுமந்து கொள்கிறேன். உனக்கு அந்தக் கவலை வேண்டாம்.

மகள்:—எனக்குக் கவலையில்லாமல் எப்படி இருக்கும், அப்பா! நீங்கள் பார்க்கும் மாப்பிள்ளை என் மனதுக்குப் பிடித்திருக்க வேண்டாமா? நான்தானே கலியாணம் செய்து கொள்ள வேண்டும்? அதற்குப் பிறகு ஆயுள் முழுவதும் அவரோடு நான் தானே இருந்தாக வேண்டும்?

தந்தை:—என் செல்வக் கண்மணி! உன்னைக் கலியாணம் செய்து கொள்கிற கழுதை உன்னைச் சரிவர வைத்துக் கொள்ளா விட்டால், அவன் தவடையில் நாலு அறை கொடுத்து விட்டு உன்னைத் திரும்ப இங்கே அழைத்துக்கொண்டு வந்துவிடுவேன். இப்போது இருப்பதுபோல் எப்போதும் நீ இந்தச் சோலைமலைக் கோட்டையின் மகாராணியாக இருக்கலாம்.

மகள்:—அது எப்படி, அப்பா! ஒருவருக்கு வாழ்க்கைப்பட்ட பிற்பாடு, நான் திரும்பவும் இங்கே வந்து சந்தோஷமாக இருக்க முடியுமா?

தந்தை:—இந்த அரண்மனையில் உன்னுடைய சந்தோஷத்துக்கு என்ன குறைவு, மாணிக்கம்?

மகள்:—பெண்ணாய்ப் பிறந்தவர்கள் புருஷன் வீட்டுக்குப் போவதுதானே முறைமை, அப்பா!

தந்தை:—அது முறைமைதான், கண்ணே! ஆனால் தகப்பனார் பார்த்துக் கலியாணம் செய்து கொடுக்கிற

போது, அப்படிக் கொடுக்கிற புருஷனுடைய வீட்டுக்கு மகள் போக வேண்டும். நாமெல்லாம் மானம் ஈனம் அற்ற வெள்ளைக்காரச் சாதியல்ல. வெள்ளைக்காரச் சாதியில் பெண்கள் தாங்களே புருஷர்களைத் தேடிக் கொள்வார்களாம். மோதிரம் மாற்றிக் கொண்டால் அவர்களுக்குக் கலியாணம் ஆகிவிட்டது போலவாம்!

இப்படிச் சொல்லிவிட்டுச் சோலைமலை மகாராஜா 'ஹா ஹா ஹா' என்று சிரித்தார். அவருடைய சிரிப்பு ஒருவாறு அடங்கிய பிறகு மறுபடியும் சம்பாஷணை தொடர்ந்தது.


மகள்:—அப்பா! வெள்ளைக்காரச் சாதியைப் பற்றி அடிக்கடி புகழ்ந்து பெருமைப் படுத்திப் பேசுவீர்களே? இன்றைக்கு ஏன் இந்தமாதிரி பேசுகிறீர்கள்?

தந்தை:—நானா வெள்ளைக்காரர்களைப் புகழ்ந்து பேசினேன்?...அதற்கென்ன? அவர்கள் சண்டையில் கெட்டிக்காரர்கள், துப்பாக்கியும் பீரங்கியும் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பேன். மற்றப்படி, அவர்களைப்போல் கலியாணம் முதலிய காரியங்களில் வியவஸ்தை இல்லாமல் இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லையே?

மகள்:—அப்பா! கலியாண விஷயத்தில் வெள்ளைக்காரர்கள் வியவஸ்தை இல்லாதவர்கள் என்று எப்படிச் சொல்லலாம்? நம்முடைய தேசத்திலும் பழைய காலத்தில் அவ்விதந் தானே நடந்தது? இராஜகுமாரிகள் சுயம்வரத்தில் தங்கள் மனதுக்கு உகந்த புருஷனைத் தேர்ந்தெடுத்து மாலையிட வில்லையா? தமயந்தியும், சாவித்ரியும் வியவஸ்தை இல்லாதவர்களா?

இதைக் கேட்ட சோலைமலை மகாராஜா சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றார். பிறகு, "மாணிக்கம்! வெளி உலகம் இன்னதென்று தெரியாமல் இந்த அரண்மனையில் அடைபட்டுக் கிடக்கும்போதே நீ இவ்வளவு கெட்டிக்காரியாக இருக்கிறாயே? உனக்குத் தகுந்த புருஷனை நான் எங்கிருந்து பிடிக்கப் போகிறேன்? பழைய நாட்களிலே போல, மதுரைப் பட்டணத்தில் பாண்டிய ராஜ்யத்தை ஸ்தாபித்து விட்டு எந்த மறவர் குலத்து வீரன் உன்னைப் பட்டத்து ராணியாக்குகிறேன் என்று வருகிறானோ, அவனுக்குத்தான் உன்னைக் கட்டிக் கொடுப்பேன். வேறு எந்தக் கழுதையாவது வந்தால் அடித்துத் துரத்துவேன்!" என்று சொல்லிவிட்டு இடி இடி யென்று சிரித்தார்.

மறுபடியும் "அதெல்லாம் கிடக்கட்டும், மாணிக்கம்! நீ உன் உடம்பைச் சரியாகப் பார்த்துக் கொள். இராத்திரியில் வெகு நேரம் வரையில் தோட்டத்தில் சுற்றி விட்டு வருகிறாயாமே? அது நல்லதல்ல. இளம் பெண்கள் இராத்திரியில் சீக்கிரம் படுத்துத் தூங்க வேண்டும். இன்றைக்காவது சீக்கிரமாகப் போய்ப் படுத்துக் கொள்!" என்றார்.



"இராத்திரியில் எனக்குச் சீக்கிரமாகத் தூக்கம் வருகிறதில்லை, அப்பா! அதனால்தான் நிலா நாட்களில் சந்திரனையும் நட்சத்திரங்களையும் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் தோட்டத்தில் உலாவி விட்டு வருகிறேன்" என்றாள் மாணிக்கவல்லி.

"அடாடா! அதுதான் கூடாது! சிறு பெண்கள் நிலாவில் இருக்கவே கூடாது; சந்திரனையே பார்க்கக் கூடாது. அப்படிச் சந்திரனையே பார்த்துக்



கொண்டிருந்த பெண்கள் சிலருக்குச் சித்தப் பிரமை பிடித்திருக்கிறது!" என்று சொல்லி வந்த மகாராஜா, திடீரென்று பேச்சை நிறுத்தி, "அது என்ன சத்தம்?" என்று கேட்டுக் கொண்டு பலகணியின் வழியாக வெளியே பார்த்தார்.

மாணிக்கவல்லி முகத்தில் பெருங் கிளர்ச்சியுடன், "ஒன்றுமில்லையே, அப்பா! வெளியில் ஒரு சத்தமும் கேட்கவில்லையே?" என்றாள்.

உண்மை யென்னவென்றால், சற்று முன்னால் மகாராஜா அங்கிருந்து போவதற்காக எழுந்ததைப் பார்த்தவுடனே, தோட்டத்தில் செடிகளின் மறைவில் நின்று கொண்டிருந்த உலகநாதத் தேவர் இன்னும் சிறிது பின்னால் நகர்ந்தார். அப்போது செடிகளின் இலைகள் அசைந்ததினால் உண்டான சலசலப்பைக் கேட்டு விட்டுத்தான், "அது என்ன சத்தம்?" என்று சோலைமலை மகாராஜா கேட்டார்.

மேற்படி கேள்வி உலகநாதத் தேவரின் காதில் விழுந்தபோது, அவருடைய குடலும் நெஞ்சும் நுரை ஈரலும் மேலே கிளம்பித் தொண்டைக்குள் வந்து அடைத்துக் கொண்டது போலே யிருந்தது.

* * *

இப்போது நினைத்துப் பார்த்தாலும் குமாரலிங்கத்துக்கு மேலே சொன்னது போன்ற தொண்டையை யடைக்கும் உணர்ச்சி ஏற்பட்டது. எப்படியோ சமாளித்துக் கொண்டு, தட்டுத் தடுமாறி நடந்து, சலசலவென்ற சத்தத்துடன் ஓடிய தெளிந்த நீரையுடைய சின்னஞ் சிறு கால்வாயின் கரையை அடைந்தான். குளிர்ந்த தண்ணீரினால் முகத்தை நன்றாய் அலம்பிக் கொண்ட பிறகு, தலையிலும் தண்ணீரை வாரி வாரி ஊற்றிக்கொண்டான்.

"ஓகோ! இங்கேயா வந்திருக்கிறீர்கள்?" என்ற இனிய குரலைக் கேட்டுத் தலை நிமிர்ந்து பார்த்தான்.

கையில் ஒரு சிறு சட்டியுடன் பொன்னம்மாள் கரை மீது நின்று கொண்டிருந்தாள்.

குமாரலிங்கத்தின் வாயிலிருந்து அவனை அறியாமல், "மாணிக்கவல்லி! வந்துவிட்டாயா?" என்ற வார்த்தைகள் வெளிவந்தன.

12. அப்பாவின் கோபம்

பொன்னம்மாள் சிறிது நேரம் திறந்த வாய் மூடாமல் அதிசயத்துடன் குமாரலிங்கத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

குமாரலிங்கம் தன்னுடைய தவறை உணர்ந்தவனாய்க் கரை மீது ஏறிப் பொன்னம்மாளின் அருகில் வந்தான்.

"பொன்னம்மா! சட்டியில் என்ன? சோறு கொண்டு வந்திருக்கிறாயா? அப்படியானால், கொடு! நீ நன்றாயிருப்பாய்! பசி பிராணன் போகிறது!" என்றான்.

பொன்னம்மாள் அதற்குப் பதில் சொல்லாமல், "சற்று முன்னால் ஒரு பெண் பிள்ளையின் பெயர் சொன்னாயே? அது யார்?" என்றாள்.

"என்னமோ பைத்தியக்காரத்தனமாய்த்தான் சொன்னேன். அது யாராயிருந்தால் இப்போது என்ன? அந்தச் சட்டியை இப்படிக் கொடு!"

"முடியாது! நீ நிஜத்தைச் சொன்னால்தான் கொடுப்பேன்; இல்லாவிட்டால் திரும்பக் கொண்டுபோய் விடுவேன்."

"என்ன சொல்ல வேண்டும் என்கிறாய்?"

"ஏதோ ஒரு பெயர் சொன்னாயே, அதுதான்!"

"மாணிக்கவல்லி என்று சொன்னேன்."

"அவள் யார்? அப்படி ஒருத்தியை ஊரிலே விட்டுவிட்டு வந்திருக்கிறாயா? உனக்குக் கலியாணம் ஆகிவிட்டதா?"

"இல்லை பொன்னம்மா, இல்லை! கலியாணம் என்ற பேச்சையே நான் காதில் போட்டுக் கொள்வதில்லை. சுவாமி விவேகானந்தர் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'இந்த நாட்டில் ஒவ்வொரு மூடனும் கலியாணம் செய்து கொண்டிருக்கிறான்!' என்றார். நம்முடைய தேசம் சுதந்திரம் அடையும் வரையில் நான் கலியாணமே செய்து கொள்ளப் போவதில்லை."

"தேசம், தேசம், தேசம்! உனக்குத் தேசம் நன்றாயிருந்தால் போதும்; வேறு யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை!"

"ஆமாம், பொன்னம்மா! அது நிஜம். தேசம் நன்றாயிருந்தால்தானே நாமெல்லாரும் நன்றாயிருக்கலாம்?"

"தேசமும் ஆச்சு! நாசமத்துப் போனதும் ஆச்சு!"

"சரி; அந்தச் சட்டியை இப்படிக் கொடு!"

"அதெல்லாம் முடியாது. நான் கேட்டதற்குப் பதில் சொன்னால்தான் தருவேன்."

"எதற்குப் பதில் சொல்ல வேண்டும்?"

"யாரோ ஒருத்தியின் பெயர் சொன்னாயே, அவள் யார்?"

"பொன்னம்மாள்
ரொம்பப் பொல்லாதவள்
பொய் கலந்த வார்த்
தையே சொல்லாதவள்

அன்னம் படைக்க
மறந்திடுவாள்
சொன்னதைச் சொன்
னதைச் சொல்லிடுவாள்!"

என்று கேலிக் குரலில் பாடினான் குமாரலிங்கம்.

பொன்னம்மாள் கடுமையான கோபம் கொண்டவள்போல் நடித்து, "அப்படியானால் நான் போகிறேன்" என்று சொல்லித் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

"பொன்னம்மா! உனக்குப் புண்ணியம் உண்டு. கொண்டு வந்த சோற்றைக் கொடு! சாப்பிட்ட பிறகு, நீ கேட்டதற்குப் பதில் நிச்சயமாகச் சொல்லுகிறேன்."

"முன்னாலேயே அப்படிச் சொல்லுவதுதானே? வீண் பொழுது போக்க எனக்கு நேரம் இல்லை. அப்பா வேறு ஊரிலேயிருந்து வந்து விட்டார்!"

இதைக் கேட்டதும் குமாரலிங்கத்தின் மனதில் ஒரு சந்தேகம் உதித்தது.

"பொன்னம்மா! உன் தகப்பனார் வந்து விட்டாரா? அவர் எப்படியிருப்பார்?" என்று கேட்டான்.

"எப்படி யிருப்பார்? இரண்டு கால், இரண்டு கையோடுதான் இருப்பார்!" என்று சொல்லிக் கொண்டே பொன்னம்மாள் கால்வாய்க் கரையில் உட்கார்ந்து சட்டியைக் குமாரலிங்கத்தினிடம் நீட்டினாள்.

"இது சோறு இல்லை; பலகாரம். இலை கொண்டுவர மறந்து போனேன். சட்டியோடுதான் சாப்பிட வேண்டும்!" என்றாள்.

"ஆகட்டும்; இந்த மட்டும் ஏதோ கொண்டு வந்தாயே? அதுவே பெரிய காரியம்!" என்று சொல்லிக் குமாரலிங்கம் சட்டியைக் கையில் வாங்கிக் கொண்டு அதிலே யிருந்த பலகாரத்தைச் சாப்பிட ஆரம்பித்தான்.

"எங்க அப்பாவுக்கு உன் பேரில் ரொம்பக் கோபம்!" என்று பொன்னம்மாள் திடீரென்று சொன்னதும், குமாரலிங்கத்துக்குப் பலகாரம் தொண்டையில் அடைத்துக் கொண்டு புரையேறி விட்டது.

பொன்னம்மாள் புன் சிரிப்புடன் அவனுடைய தலையிலும் முதுகிலும் தடவிக் கொடுத்தாள். இருமல் நின்றதும், "நல்ல வேளை! பிழைத்தாய்! உன்னைத்தான் நான் நம்பி யிருக்கிறேன்!" என்றாள்.

"என்னை எதற்காக நம்பி யிருக்கிறாய்?"

"எல்லாவற்றுக்குந்தான். வீட்டிலே எனக்குக் கஷ்டம் தாங்க முடியவில்லை. அப்பாவோ ரொம்பக் கோபக்காரர். சின்னாயி என்னைத் தினம் தினம் வதைத்து எடுத்து விடுகிறாள்!"

"ஐயோ! பாவம்! ஆனால் உன் அப்பாவுக்கு என் பேரில் கோபம் என்கிறாயே, அது ஏன்? என்னை அவருக்குத் தெரியவே தெரியாதே?"

"எப்படியோ அவருக்கு உன்னைத் தெரிந்திருக்கிறது. நேற்று ராத்திரி உன் பெயரைச் சொல்லித் திட்டினார்!"

"இது என்ன கூத்து? என்னை எதற்காகத் திட்டினார்?"

"ஏற்கனவே அவருக்குக் காங்கிரஸ்காரன் என்றாலே ஆகாது. 'கதர்

கட்டிய காவாலிப் பயல்கள்' என்று அடிக்கடி திட்டுவார். நேற்று ராத்திரி பேச்சு வாக்கில் அதன் காரணத்தை விசாரித்தேன். எங்க அப்பா பல ஒத்தியின் பேரில் நிறையப் பணம் கடன் கொடுத்திருந்தார். காங்கிரஸ் கவருமெண்டு நடந்தபோது, கடன் வாங்கியவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை என்று சட்டம் செய்து விட்டார்களாமே? அதனால் அப்பாவுக்கு ரொம்பப் பணம் நஷ்டம்."

"ஆமாம், விவசாயக் கடன் சட்டம் என்று ஒரு சட்டம் வந்திருக்கிறது. அதனால் கடன் வாங்கியிருந்த எத்தனையோ விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட்டது. உன் தகப்பனருக்கு மட்டும் நஷ்டம் போலிருக்கிறது."

"அது மட்டுமில்லை. காங்கிரஸ் காரனுங்க, கள்ளு சாராயக் கடைகளை யெல்லாம் மூடணும் என்கிறார்களாமே!"

"ஆமாம்; அது ஜனங்களுக்கு நல்லதுதானே! உங்க அப்பா தண்ணி போடுகிறவராக்கும்!"

"இந்தக் காலத்திலே தண்ணி போடாதவங்க யார் இருக்கிறாங்க? ஊரிலே முக்காலே மூணு வீசம் பேர் பொழுது சாய்ந்ததும் கள்ளுக் கடை, சாராயக் கடை போறவங்கதான். அதோடு இல்லை. எங்க அப்பா ஒரு சாராயக் கடையைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்."

"ஓஹோ! அப்படியானால் சரிதான்! கோபத்துக்குக் காரணம் இருக்கிறது. ஆனால் என் பேரில் அவருக்குத் தனிப்பட எதற்காகக் கோபம்? நான் என்ன செய்தேன்?"

"கேட்டை, மூட்டை, செவ்வாய்க் கிழமை எல்லாம் சேர்ந்து கொண்டது போல் ஆகியிருக்கிறது. கோர்ட்டிலே அவர் ஒரு தாவாப் போட்டிருந்தாராம். ஜனங்கள் கோர்ட்டைத் தீ வைத்துக் கொளுத்தி விட்டார்களாம். அதனாலே அவருடைய பத்திரம் ஏதோ எரிந்து போய் விட்டதாம்! உன்னாலே, உன்னுடைய பிரசங்கத்தைக் கேட்டதனாலேதான், ஜனங்கள் அப்படி வெறி பிடித்துக் கோர்ட்டைக் கொளுத்தினாங்க என்று சொல்லி விட்டு, உன்னைத் திட்டு திட்டு என்று திட்டினார். ஆனால் நீ இங்கே இருக்கிறது அவருக்குத் தெரியாது. அவர் கையிலே மட்டும் நீ அகப்பட்டால் உன் முதுகுத் தோலை உரிச்சுடுவேன், அப்படி இப்படி என்று அவர் கத்தின போது எனக்கு ரொம்பப் பயமாயிருந்தது. அதனாலேதான் காலங் காத்தாலே உன்னைப் பார்ப்பதற்கு வந்தேன்."

குமாரலிங்கத்துக்குப் பளிச்சென்று ஒரு காட்சி ஞாபகத்துக்கு வந்தது. அன்று காலையில் அந்தப் பக்கம் போன கடுகடுப்பான முகத்தைக் கனவிலே சோலைமலை அரண்மனையிலே மட்டுமல்ல, — வேறொரு இடத்திலும் அவன் பார்த்ததுண்டு. அவனுடைய வீராவேசப் பிரசங்கத்தைக் கேட்டு ஜனங்கள் சிறைக் கதவை உடைத்துத் தேச பக்தர்களை விடுதலை செய்த அன்று பொதுக் கூட்டம் ஒன்று நடந்ததல்லவா? கூட்டம் ஆரம்பமாகும் சமயத்தில் ஒரு சின்ன கலாட்டா நடந்தது. அதற்குக் காரணம், அன்று காலையில் அந்தப் பக்கமாக ஒற்றையடிப் பாதையில் போன மனிதன்தான். அவன் அன்றைக்குப் போதை மயக்கத்தில் இருந்தான். "இங்கிலீஷ்காரனுங்களிடத்தில் துப்பாக்கி, பீரங்கி, ஏரோப்ளேன், வெடிகுண்டு எல்லாம் இருக்கிறது. காங்கிரஸ்காரனுங்க ளிடத்தில் துருப் பிடித்த கத்தி கபடா கூடக் கிடையாது. சவரம் பண்ணுகிற கத்தி கூட ஒரு பயல் கிட்டேயும் இல்லை! இந்தச் சூரன்கள்தான் இங்கிலீஷ்காரனை விரட்டியடிச்சுடப் போறான்களாம்! போங்கடா, போக்கடாப் பயல்களா!" என்று இந்த மாதிரி அவன் இரைந்து கத்தினான். பக்கத்திலிருந்தவர்கள் அவனிடம் சண்டைக்குப் போனார்கள். தொண்டர்கள் சண்டையை விலக்கிச் சமாதானம் செய்து அவனைக் கூட்டத்திலிருந்து வெளியேற்றினார்கள். இவ்வளவும் ஒரு நிமிஷத்துக்குள் குமாரலிங்கத்துக்கு ஞாபகம் வந்தது.

(தொடரும்)


டயர்களின் மேலிருக்கும்
சிவப்பு வளையமே
INDIA
Super
CYCLE
TYRE
நல்ல டயர்
என்பதின் அறிகுறி

IT–343



அவனுக்கு நேர்ந்த விபத்து!

தொழிலாளி (முதலாளியிடம்):—ஐயா, என் சம்பளத்தைத் தயவு செய்து கொஞ்சம் அதிகமாக்கினால் எனக்குச் சௌகரியமாயிருக்கும்; இப்பொழுதுதான் எனக்குக் கல்யாணம் ஆயிற்று.......

முதலாளி:—உனக்கு ஒன்றும் செய்ய முடியாததற்காக நான் மிகவும் வருந்துகிறேன். தொழிற்சாலைக்கு வெளியே நேரும் விபத்துகளுக்கு நான் ஜவாப்தாரியல்ல!

சத்திய சோதனை!

சிறுவன் (வழிப்போக்கனிடம்):—ஸார், நீங்கள் இன்று காலை இந்தத் தெருவழியாகப் போனபோது ஒரு ரூபாயைத் தொலைத்து விட்டீர்களா?

வழிப்போக்கன்:—ஆமாம், ஏன் கேட்கிறாய்?

சிறுவன்:—இல்லை; இதுவரை எத்தனை பேர் தொலைத்து இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து வருகிறேன். நீங்கள் இருபத்திரண்டாவது ஆசாமி!

சரிதான்!

ஒருவர்:—என் ஐயா, பையன் ரொம்ப நன்றாயிருப்பான், அப்படி, இப்படி என்று அளந்து என்னை ஏமாற்றி விட்டீரே? அவனுக்குக் காது செவிடாமே?

தரகர்:—நான் சொன்னதில் என்ன தவறு? பையன் ரொம்ப நல்லவன், யார் பேச்சையும் காதில் போட்டுக் கொள்ள மாட்டான் என்று தானே சொன்னேன்?

உண்மை!

நீதிபதி (குற்றவாளியைப் பார்த்து):—உனக்கு வக்கீல் கிடையாதா?

குற்றவாளி:—இல்லீங்க!

நீதிபதி:—உன் கட்சியை எடுத்துப் பேச ஒரு வக்கீல் இருந்தால் நல்லதென்று உனக்குத் தோன்றவில்லையா?

குற்றவாளி:—அது அவசியம் இல்லீங்க! நான் உண்மையைச் சொல்லப் போகிறேன்!

அவன் கேள்வி!

வகுப்பு ஆசிரியர் (கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே):—நம் வகுப்பு முடிவதற்கு இன்னும் மூன்று நிமிஷங்கள் இருக்கின்றன. யாராவது ஏதாவது கேள்வி கேட்பதாயிருந்தால் கேளுங்கள்!

ஒரு மாணவன்:—ஸார், மணி என்ன?

அட பாவமே!

வைத்தியர்:—உங்களுக்கு வேண்டியது நல்ல காற்றும் தேகப் பயிற்சியுந்தான். இதோ பாருங்கள், இந்தப் புத்தகத்தில் சுகாதாரத்தைப் பற்றி ரொம்ப நன்றாக எழுதியிருக்கிறது!

நோயாளி:—ஐயோ! நான்தானே அந்தப் புத்தகத்தை எழுதியவன்?

நல்ல கேள்வி

சாப்பிட்டவர்:—இதற்கு முன் இவ்வளவு மோசமான காப்பியை நான் எங்கேயும் சாப்பிட்டதில்லை.

டெபஜி:—ஏன்? இதற்கு முன் இந்த ஹோட்டலுக்கு நீங்கள் வந்ததில்லையோ?

வரமாட்டார்!

கிச்சு:—டேய், நம்ம இப்படி விளையாடறமே, உங்க அப்பா வந்தா வைய மாட்டாராடா?

விச்சு:—போடா கிச்சு, அவர் எங்கேடா இப்போ வரப் போறார்? ஆபீஸிலிருந்து அவர் 'பஸ்'ஸிலேதானேடா வரணும்?



"என்னப்பா, குதிரை நல்லா ஓடுமென்று சொல்லி என்னை ஏமாற்றி விட்டாயே? இப்போ மணியைப் பாரு!"

"யாருங்க இல்லேன்னது? குதிரை நல்லாத்தானுங்க ஓடும்; இந்த வண்டி தானுங்க அது ஓடறதுக்கு இடைஞ்சலாயிருக்கு!"

குறைந்த விலை-
உயர்ந்த ரகம்

ஸ்டேன்ஸ்
வறுத்த
காப்பிக் கொட்டை
தாங்களே பொடி
செய்ய விரும்பு
வர்களுக்குப்
பொறுக்கி வறுத்த
கொட்டையும்
கிடைக்கும்.

ஏஜண்டுகளுக்கு
நேரமாய்
அனுப்புகிறோம்.



குறைந்த விலையில் உயர்ந்த காப்பி வேண்டுமா? ஸ்டேன்ஸ் ரெட் என்சைன் காப்பி கிடைக்குமே.

பொறுக்கி வறுத்துப் பொடி செய்வதால் கிடைக்கும் முழு மணமும் ருசியும் ஸ்டேன்ஸ் சிவப்பு லேபிள் காப்பியில் உண்டு. காற்றுப் புகாத டப்பாக்களில் புத்தம் புது மணத்தோடு எப்போதும் கிடைக்கும்.

Stanes சிவப்பு லேபிள் கலப்பற்ற **காப்பித்தூளும் காப்பிக் கொட்டையும்**

3, 7, 14, 20 பவுண்டு டின்களில் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட், கோயமுத்தூர், தென் இந்தியா

சென்னை மாகாணத்திலுள்ள இடங்களுக்கு மாத்திரம் ஸ்பெஷல் இலவச டெலிவரி விலைகள் :

பாசஞ்சர் டிரெயின் மூலம்:

10 பவுண்டு பை பிளாண்டேஷன் O/A தட்டைக் கொட்டை ... ரூ. 12-8-0

குட்ஸ் டிரெயின் மூலம் :

28 பவுண்டு பை பிளாண்டேஷன் O/A தட்டைக் கொட்டை ... ரூ. 33-4-0

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி லிமிடெட்., டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட்., மானேஜிங் ஏஜண்டுகள், கோயமுத்தூர் என்ற விலாசத்திற்கு பூரா தொகையையும் மணியார்டர் மூலம் அனுப்புதல் வேண்டும்.


ஒரு ப்ரதிக்ஞை நிறைவேற்றப்பட்டது!

எமது முந்தின அறிவுப்புக்கிசைய, மலிவான விலையிலுள்ள பீப்பிள்ஸ் ஸெட் இப்பொழுது மெஸ்ஸர்ஸ். பஸல்பாய் லிமிடெட் என்பவர்களிடம் கிடைக்கும். விலை ரூ. 95/- தான். சிறிய வருமான முடையவர்களின் தேவைகளைக் கவனிப்பதே எமது முக்கிய உத்தேச மாதலால், மிகக் குறைவான விலைக்கு கூடுமானதும் அதிக திருப்தி யளித்து வர நாங்கள் விடாது முயற்சிப்போம்.

'தி பீப்பிள்ஸ் ஸெட்'

கவர்ச்சிகரமான அம்சங்கள்

1. சிறிய வருவாய்க்காரர்களின் சக்திக்குதக்கதாப்போல் மலிவான விலை.
2. அதிகப்படியான உழைப்பு.
3. சுலுவாக வேலை செய்விக்கலாம்.
4. குறைந்த காண்டு செலவு.
5. வாயுமண்டல சம்பந்தமான தொந்தரவே கிடையாது.
6. கிராமபோன் ஆம்ப்ளிபைய ராகவும் வேலை செய்கிறது.



தி நாஷனல் ரேடியோ & எஞ்ஜினீயரிங் கோ., லிட்.

வினியோகஸ்தர்கள் — மெஸ்ஸர்ஸ் பஸல்பாய் லிமிடெட்.

1/18, மவுண்டு ரோடு, மதராஸ்

மதியூகி மந்திரி

என்வெனன்

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்தார். அவருக்கு மதியூகி என்ற ஒரு மந்திரி இருந்தார். அவர் தம் பெயருக் கேற்றாற்போல் மிகவும் புத்திக் கூர்மை உள்ளவராக இருந்தார். ஆதலால் ராஜாவுக்கு அவர் மீது ரொம்பவும் பிரியம் ஏற்பட்டிருந்தது.

ராணிக்கு மதியூகியைக் கண்டால் பிடிப்பதில்லை. அவளுக்குத் தூமகேது என்ற தம்பி ஒருவன் இருந்தான். அவனை மந்திரியாக்கி விட்டு மதியூகியை வேலையிலிருந்து நீக்கி விட வேண்டுமென்று ராணிக்கு வெகு நாளாகவே ஆசை.

ஒருநாள் ராஜா அந்தப்புரத்துக்கு வந்திருந்த பொழுது, "என் தம்பிக்கு மந்திரிப் பதவியைக் கொடுக்கக் கூடாதா? அவன் அந்தப் பதவிக்குத் தகுதியுள்ளவன் இல்லையா?" என்று கேட்டாள் ராணி.

"உன் தம்பி மதியூகியை விடக் கெட்டிக்காரனா, என்ன?" என்று கேட்டார் ராஜா.

ராணி உடனே, "சந்தேகம் என்ன? மதியூகியைக் காட்டிலும் என் தம்பி எந்த விதத்திலும் தாழ்ந்தவன் அல்ல. நீங்கள் வேண்டுமானால் பரீட்சை செய்து பாருங்களேன்!" என்றாள்.



ராஜா சிறிது நேரம் யோசித்தார். பிறகு ஒரு சேவகனைப் பார்த்து, "மதியூகியையும் தூமகேதுவையும் உடனே இங்கே வரச் சொல்!" என்று கட்டளையிட்டார்.

ராஜா, முதலில் தூமகேதுவைப் பார்த்து, "நேற்று இரவு ஒரு சம்பவம் நிகழ்ந்தது. என்னை ஒருவன் தன் காலால் உதைத்து விட்டான். ஆம், நிஜமாகவேதான்! அப்படிச் செய்தவனுக்கு என்ன தண்டனை அளிக்கலாம்?" என்று கேட்டார்.

தூமகேது ஒரு விநாடி கூட யோசிக்காமல், "மஹாராஜா, அந்தப் பாதகனின் கால்களைத் துண்டித்து விட்டு மறு காரியம் பார்க்க வேண்டும்!" என்றான்.

ராஜா, மதியூகியைப் பார்த்து, "உமது அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

மதியூகி சிறிது நேரம் யோசித்து விட்டு, "மஹாராஜா, உங்களை உதைத்த அந்தக் கால்களுக்கு வைரச் சலங்கை கட்ட வேண்டும்! ஏனெனில் அவ்வாறு செய்தது உங்கள் திருக்குமாரனான பச்சிளங் குழந்தையல்லவா?" என்று கூறிச் சிரித்தார்.

ராஜா சந்தோஷத்துடன் ராணியைப் பார்த்து, "பார்த்தாயா! மதியூகி எவ்வளவு சாமர்த்தியமாக உண்மையைக் கண்டு பிடித்தார்! உன் தம்பி கொஞ்சங்கூட யோசனையின்றி அவன் கால்களைத் துண்டிக்க வேண்டும் என்று கூறினானே! இப்பொழுதாவது தெரிகிறதா இவ்விருவருக்கும் உள்ள வித்தியாசம்?" என்றார்.

ராணிக்கு வெட்கமாய்ப் போய் விட்டது. தலையைக் குனிந்து கொண்டாள்.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

170. வீற்றிருந்தார் முனிபுங்கவர்!

சீதையின் அழகைப் பற்றிக் காதால் கேட்டவன்தானே ராவணன்? மனக் கண்ணினால் எப்படியெல்லாமோ பாவனை செய்து பார்த்துக் கொண்டும் இருந்தவனல்லவா? ஆனாலும் நேரில் பார்த்தபோதுதான் அவளுடைய அழகு தெய்விகமான அழகென்றும், எங்கும் பார்த்தறியாததென்றும் தெரிய வந்தது. அதனால் பார்த்த மாத்திரத்தில் விலவிலத்துப் போகிறான் அவன். மேனியெல்லாம் வேர்த்து விட்டது. உடம்பெல்லாம் சோர்ந்து விட்டது.

சிறிது நேரம் பார்த்துப் பழகிய பின் மனம் ஒரு வகையாய்த் தெளிந்தது. அச்சம் நீங்கி அதிசய உணர்ச்சி வந்து மேலிடுகிறது. 'ஆயிரங் கண் வேண்டுமே, இந்த அழகின் படலங்களை யெல்லாம் பார்த்துப் பார்த்து அனுபவிக்க!' என்றெல்லாம் மனசுக்குள்ளே பாராட்டுகிறான்.

இன்னும் சிறிது நேரம் ஆகவும் காதல் உணர்ச்சி வந்து ஒரு வெறியாய் விடுகிறது.

வெறியில் வரும் வார்த்தையைப் பார்க்கலாம்:

'தேவரும் அவுணரும்
தேவி மாரொடும்
கூவல்செய் தொழிலினர்
குடிமை செய்திட,
மூவுலகமும் இவள்
முறையின் ஆள,யான்
ஏவல்செய்(து) உய்குவென்
இனி'என்(று) உன்னினான்.

[கூவல் செய் தொழிலினர்: கூப்பிட்ட போதெல்லாம் குற்றேவல் செய்பவராய்; குடிமை செய்திட: வீட்டோடு ஒட்டி வேலை செய்ய; மூவுலகம் இவள் முறையின் ஆள: ஆண்டு வரும் மூன்று உலகத்தையுமே சக்கரவர்த்தினி பதவியிலிருந்து இவள் ஆள; யான் ஏவல் செய்து உய்குவென் இனி என்று உன்னினான்: தான் சக்கரவர்த்தியாக இருக்கப் போகிறான்? அவளுக்கு ஏவல் செய்து ஜன்ம சாபல்யம் அடையப் போகிறான்;— என்றெல்லாம் ஓர் எக்களிப்புக்கு உள்ளாகிறான் ராவணன்.]

* * *

ராமன் காரணமாகக் கிலேசமுற்றிருக்கிறாள் சீதை என்பது ராவணனுக்குத் தெரியும். போதாததற்கு லக்ஷ்மணனையும் வேண்டாதபடி கோபித்துப் பேசியிருக்கிறாள். மனசில் கலக்கமும் துயரும் இருப்பது இயல்பு தானே? மனசிலுள்ள துயர பாவத்தையும் கண்டுகொண்டான் ராவணன். அவன் எண்ணம் எப்படிப் போகிறது பாருங்கள்:

'உளைவுறு துயர்முகத்(து)
ஒளி இதாம்எனில்,
முளைஎயி(று) இலங்கிடு
முறுவல் என்படும்!
தளையவிழ் குழல் இவள்க்
கண்டு தந்தஎன்
இளையவட்(கு) அளிப்பென்என்
அர(சு)'என் றெண்ணினான்.

[உளைவுறு துயர்: உள்ளே யிருந்து துன்புறுத்திக் கொண்டிருக்கிற துயர் படைத்த; முகத்து ஒளி இதாம் எனில்: முகத்தின் பிரகாசமும் அழகும் இப்படி என்றால்; முளை எயிறு இலங்கிடும் முறுவல் என்படும்: சின்னஞ் சிறு பற்கள் தெரியப் புன்முறுவல் பூத்து விட்டால் அப்போது அழகு எப்படியிருக்கும்! தளையவிழ் குழல் இவள் கண்டு தந்த: பூவிதழ் சூடிய கூந்தலோடு கூடிய இவளை முதலிலே கண்டு பிறகு எனக்கு அளித்திட்ட என் அருமைத் தங்கையான சூர்ப்பணகைக்கு என் அரசை அளித்து விடுகிறேன்.

குறிப்பு:—முந்தின செய்யுளில் சீதையின் அழகைப் பார்த்த வெறியில் ராஜ்யத்தைச் சீதைக்கே கொடுத்து விடுகிறதாக எண்ணினான். இந்தச் செய்யுளில், 'நம்முடைய தங்கை அல்லவா இத்தகைய பெண்ணை நமக்குத் தந்திருக்கிறாள்!' என்று ஓர் ஆனந்த வெறி உண்டாகிறது. இந்த ஆனந்த வெறியில் ராஜ்யத்தைத் தங்கைக்கே கொடுக்க வேண்டுமென்று எண்ணுகிறான். இதெல்லாம் உணர்ச்சி வெறியிலிருந்து உண்டாகும் இயல்பான வார்த்தைகள். இவைகளின் உண்மையான பாவத்தைக் கவனிக்க வேண்டும்,— முரண்பாட்டை அல்ல.]

இவ்விதமான எண்ணங்களோடு காதலானது மேலும் மேலும் மனசில் எழுந்து கொண்டிருக்கிறது அரக்கனுக்கு. சீதைக்கு என்ன தெரியும்? விருந்தினர்களை உபசரிக்கும் முறைப்படி தனக்குள்ள துயரத்தை மறைக்கிறாள்.

ஆண்டையின், அனையன
 உன்னி ஆசைமேல்
மூண்டெழு சிந்தனை
 முறையி லோன்தனைக்
காண்டலும், கண்ணின்நீர்
 துடைத்த கற்பினாள்,
'ஈண்டெழுந்(து) அருளு'மென்(று)
 இனிய கூறினாள்.

[ஆண்டையின்: அந்த வேளையில்; அனையன உன்னி: மேலே சொன்னபடியெல்லாம் எண்ணி; ஆசைமேல் மூண்டெழு: காதல் எண்ணம் மேலும் மேலும் எழுந்து கொண்டிருக்கும்; சிந்தனை: சிந்தனையோடு கூடிய; முறையிலோன் தனை: ஒழுங்கில்லாத ராவணனை; ஈண்டு எழுந்து அருளும் என்று இனிய கூறினாள்: இங்கே தயவு செய்து வர வேண்டும், உட்கார வேண்டும் என்று இனிய பண்புடனேயே சொன்னாள் — நாயகன் காரணமாக மனதிலுள்ள துயரத்தை மறைத்தவளாய்.]

* * *

பக்தி பூர்வமான பாடலை அல்லவா உணர்ச்சி பாவந் தோன்றப் பாடிக் கொண்டு வந்திருக்கிறான் ராவணன்! அதைக் கேட்ட சீதைக்கு அபார மரியாதை உண்டாவதில் அதிசயம் இல்லை. அதனால் முனிவனை ரொம்பவும் பாராட்டுகிறாள். அவன் பர்ணசாலைக்குள் வரவும், "இங்கே உட்கார்ந்தருள வேண்டும்" என்று பிரம்பினால் செய்த பாய் ஒன்றை மிக்க மரியாதையோடு விரித்தாள்.

ஏத்தினள், எய்தலும்
 'இருத்திர் ஈண்(டு)' என
வேத்திரத்(து) ஆசனம்
 விதியின் நல்கினாள்,—
மாத்திரி தண்(டு)அயல்
 வைத்து வஞ்சனும்,
பூந்தொடர் சாலையின்
 இருந்த போழ்தினை.

[ஏத்தினள்: வந்த முனிவனை ரொம்பவும் பாராட்டிப் பேசினாள்; அவன் எய்தலும்: பர்ணசாலையண்டை வரவும்; இருத்திர் ஈண்டு என: தயவு செய்து உட்காருங்கள் என; வேத்திரத்து ஆசனம் விதியின் நல்கினாள்: பிரம்பினால் செய்த பாயை ஆசாரத்துக்கு உரிய விதமாக இட்டாள்; மாத்திரி தண்டு அயல் வைத்து: புனிதமான திரிதண்டத்தைப் பக்கத்தில் வெகு ஜாக்கிரதையாக வைத்து; வஞ்சனும்: ராவணனும்; பூந்தொடர் சாலையின் இருந்த போழ்தினை: பூங்கொடிகள் படர்ந்த சாலையின் உள்ளே போய் உட்கார்ந்து கொண்டபோது.]

முனிவர்கள் ஆசனத்தில் உட்கார்ந்தவுடன் எப்படி ஜாக்கிரதையாகத் தங்கள் திரிதண்டத்தைப் பக்கத்தில் வைத்துக் கொள்ளுவார்களோ, அவ்விதமாக மெள்ள ஒரு மரியாதை பாவத்தோடு தான் கொண்டு வந்த திரிதண்டத்தைப் பக்கத்தில் வைக்கிறான் ராவணன்.

இந்த விதமாகத் தன்னை உண்மையான சன்னியாசிதான் என்று சீதை எண்ணும்படியாக உட்கார்ந்து கொண்டான். இனி என்ன செய்கிறான், பார்க்கலாம்.

★ ★ ★ யாருக்குப் பைத்தியம்? ★ ★ ★

உலகப் பிரசித்தி பெற்ற நீதிக் கதைகளை எழுதிய ஈஸாப் ஒரு சமயம் கிரேக்க நாட்டு அரசனின் அடிமையாக இருந்தார். அந்த அரசன் ஒரு முறை பிரயாணம் செய்தபோது தன் அடிமைகளைத் தனக்கு வேண்டிய சாமான்களைச் சுமந்து கொண்டு வருமாறு கட்டளையிட்டான்.

எல்லா அடிமைகளும் இலேசாக உள்ள சாமான்களையே தேடித் தேடி எடுத்துச் சுமந்து கொண்டார்கள். ஆனால் ஈஸாப் மட்டும் எல்லா மூட்டைகளையும் விட மிகவும் பாரமாக இருந்த சாப்பாட்டு மூட்டையைத் தூக்கித் தம் தோளில் போட்டுக் கொண்டார்!

இதைப் பார்த்த மற்ற அடிமைகள், "இது என்ன, ஈஸாப்! உமக்கென்ன பைத்தியமா? இவ்வளவு பெரிய சுமையை எடுத்துக் கொண்டீரே?" என்றார்கள்.

ஈஸாப் அவர்கள் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் மேலே நடந்தார். மத்தியான வேளை வந்தது; எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். ஈஸாப் மூட்டையின் பளு பாதி குறைந்தது. அன்றிரவு மறுபடியும் எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தபோது, அவருடைய மூட்டை முழுவதுமே காலியாகிவிட்டது!

மறுநாள் காலை பிரயாணம் தொடங்கியபோது கையை வீசிக்கொண்டு நடந்த ஈஸாப் மற்ற அடிமைகளைப் பார்த்து, "இப்போது யாருக்குப் பைத்தியம்? உங்களுக்கா, எனக்கா?" என்று கேட்டார். அவர்கள் விழித்தார்கள்!



இரு நண்பர்கள்

ஆசிரியர்: சுதர்சன் மொழிபெயர்ப்பு: ரா. விழிநாதன்

நந்தகிசோர் சொல்லுகிறான்:

என்னுடைய மகிழ்ச்சி நெடுநேரம் நீடிக்கவில்லை. "நீங்கள் என் தாயாரைக் கவனித்துக் கொள்கிறீர்கள் என்பதையறிந்தேன். அதனால்தான் நான் கவலையற்று இருந்தேன்!" என்று அவன் வெகு சாதுரியமாகப் பதில் சொல்லிவிட்டான்.

நான் வெட்கி, "அது போகட்டும்; இனி என்ன யோசனை? இங்கேயே இருக்கலாமோ இல்லையோ?" என்று கேள்வியைத் திருப்பினேன்.

"இல்லாமல் எங்கே போகிறது? இனிமேல் யாராவது அவரைப் போகவிட்டால் தானே?" என்று புன்முறுவலுடன் ரூபராணி சொன்னாள்.

என் உள்ளத்தை மறுபடியும் இந்த வார்த்தை தைத்தது.

"எனக்கு உங்களுடன் இங்கேயே இருப்பதில் சந்தோஷந்தான். ஆனாலும் என்ன செய்வது? கல்கத்தாவில் ஒரு சேட்டின் பிள்ளைக்கு டியூஷன் சொல்லிக் கொடுப்பதாக நான் ஒப்புக்கொண்டு விட்டேனே?" என்றான் வித்யாசங்கர்.

ரூபராணி அவனை ஒரு முறை பார்த்தாள். அந்த ஊமைப் பார்வை, 'இவர் நமக்காகத்தான் ஊரை விட்டு ஓடுகிறார்!' என்று சொல்லுவது போலிருந்தது.

"உனக்கு எதற்கு அந்த வேலையெல்லாம்? நீ என்னுடனேயே இரு. மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறேன்" என்றேன் நான்.

"அதெல்லாம் நடக்காத காரியம். உன்னைப் பார்க்க முடிந்ததே. அதுவே எனக்குத் திருப்தி. என்னைத் தடுக்காதே!" என்றான் வித்யாசங்கர்.

நான் அவனுடைய தோளின் மீது கையைப் போட்ட வண்ணம், இப்போது "நான் மோட்டார் ஏஜென்ஸி எடுத்திருக்கிறேன். அதை என்னால் தனியாகக் கவனிக்க முடியவில்லை. நீயும் என்னுடனிருந்து அதைக் கவனித்துக் கொள்ள வேண்டும். உன்னை விடமாட்டேன்!" என்றேன்.

வித்யாசங்கர் என்ன பதில் அளிப்பது என்று புரியாமல் கோமதியாற்றின் பிரவாகத்தைச் சிறிது நேரம் பார்த்தவாறு அமர்ந்திருந்தான். பிறகு, "என்னால் அந்த மோட்டார் வேலையெல்லாம் செய்ய முடியாது. ஒரு பையனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தோம், வீட்டுக்கு வந்தோம் என்றாலே போதுமானது. எனக்கு எதற்கு இந்தத் தொல்லை பிடித்த வேலையெல்லாம்?" என்றான் அவன்.

இதைக் கேட்ட ரூபராணி ஒரு பெருமூச்சு எறிந்தாள். அவள் முகத் தோற்றத்தைக் கொண்டு உள்ளத்தாக்கத்தை அறிந்து கொண்டேன். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா?

நான் அவளுடைய உள்ளத்தாக்கத்தை அறிந்து கொள்ளாமல் இருந்தால் வித்யாசங்கரை எப்படியாவது பலவந்தப் படுத்தி என்னிடத்திலேயே இருத்திக் கொள்ள முயன்றிருப்பேன். ஆனால் இப்பொழுதோ, அவனைத் தடுத்து நிறுத்தும் ஆசையே எனக்கு உதிக்கவில்லை. தனக்குத் தானே கேடு விளைவித்துக் கொள்ள யாருக்குத் தான் மனம் வரும்?

ஆகவே, "என்னிடம் வேலை பார்ப்பதற்கு உனக்கு இஷ்டமில்லா விட்டால், உனக்குப் பிடித்த வேலையாகக் கல்கத்தாவிலோ, பம்பாயிலோ, சென்னையிலோ தனியாக ஆரம்பித்துக் கொள்ளேன்!" என்றேன் நான்.

வித்யாசங்கர் என்னை ஒரு முறை பார்த்துவிட்டுப் புன்முறுவலுடன், "நான் பணத்துக்கு எங்கே போவது?" என்றான்.

உடனே என் சட்டைப் பையிலிருந்து பவுண்டன் பேனாவை எடுத்து இருபது ஆயிரம் ரூபாய்க்கு ஒரு 'செக்' எழுதி அவன் கையில் திணித்த வண்ணம், "இதோ, ரூபாய்!" என்றேன்.

ரூபாராணி என் உதார குணத்தைக் கண்டு வியந்தாள். 'நான் வித்யாசங்கரை லக்னௌவிலிருந்து வெளியேற்றுவதற்காக இதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகச் செலவு செய்யத் தயாராயிருக்கிறேன்' என்பது அவளுக்குத் தெரிந்தால்தானே?

ஆனால் வித்யாசங்கர் என் 'செக்'கைப் பெற்றுக் கொள்ளவில்லை. "உன்னுடைய நன்றிக்கு என் மனமார்ந்த வந்தனங்கள். என் மூளை வியாபாரத்தில் செல்லாது. நான் வியாபாரத்தில் இறங்கினால் பணம் தான் கரியாகும்! வேண்டாம், அப்பா!" என்று சொல்லிவிட்டான்.

என் தலை வெட்கத்தினால் தொங்கியது. 'வித்யாசங்கர் கல்வியறிவிலும் குணத்திலும்தான் என்னைவிட மேலானவன்' என்று இன்றுவரை எண்ணியிருந்தேன். 'அவன் ஐசுவரியத்திலும் என்னைவிட எவ்வளவோ மேலானவன்!' என்பதை இன்றுதான் உணர்ந்தேன். பணத்தைக் கொண்டு வசப்படுத்திவிடலாம் என்ற என் எண்ணத்தில் அவன் மண்ணைப் போட்டுவிட்டான்! பரம ஏழையாயிருந்தால்தான் என்ன? அவனைப் பணத்தால் வசப்படுத்த முடியாது என்பது எனக்கு திரிசனமாக விளங்கிவிட்டது. அவன் என்னை எந்த விஷயத்திலுமே வெற்றி கொண்டவன். இவ் விஷயத்தில் மட்டும் அவன் தோல்வியுறுவானா, என்ன? நான் அவனுடைய பெருமைக்கு எதிரில் தலை வணங்கும்படியாகிவிட்டது. 'இவன் செத்தாலும் சாவானே தவிர, பிறருடைய மரியாதையைக் குலைக்க ஒருநாளும் துணிய மாட்டான். அவ்வளவு தாழ்ந்தவனாக அவனுக்கு மனமே வராது. இவனை மனிதன் என்று எண்ணவே கூடாது; தெய்வமாக எண்ணித்தான் தொழ வேண்டும். ஒருவிதத்தில் தெய்வம் என்று சொல்வதுகூடத் தப்பு. ஏனென்றால் தெய்வங்கள் கூட அழகு மயக்கத்தில் சில சமயம் நெறி தவறியிருக்கின்றன. இவனை நெறி தவறியவனாக மாற்ற எந்தச் சக்தியினாலும் முடியாது. இவன் தன் மனத்தை வெற்றி கொண்டவன்; ஆசைகளை அடக்கியவன்!' என்ற எண்ணம் என் மனத்தில் உறுதிப்பட்டது.

"நீ இன்னும் என்னை வேற்று மனிதனாகத்தான் பாவிக்கிறாய் என்று எனக்குத் தோன்றுகிறது!" என்றேன் நான்.

வித்யாசங்கர் புன்முறுவலுடன், "அதனால்தானே கல்கத்தாவிலிருந்து இவ்வளவு தூரத் தூக்கப்பால் உள்ள உன்னைப் பார்க்க வந்திருக்கிறேன்!" என்றான்.

"அப்படியானால் இவ்வளவு சங்கோசம் எதற்கு? நான் இரண்டு விஷயங்கள் சொன்னேன். நீ இரண்டையும் மறுத்து விட்டாயே! இதற்கு என்ன அர்த்தம்? — என் ரூபாராணி, நீதான் சொல்லேன்!" என்றேன் நான்.

ரூபாராணி தன் படவைத் தலைப்பைச் சரி செய்தவாறு, "இதற்கு என்ன அர்த்தம் என்று கேட்பானேன்? இனிமேல் நம்மை விட்டுவிட்டு அவரால் போக முடியாது! அவர் சொல்வதைச் சொல்லட்டும்; நீங்கள் அவரை மோட்டாரில் தூக்கிப் போட்டுக் கொண்டுபோய் எம்போரியில் உட்கார வைத்துவிடுங்கள்!" என்றாள்.



"பேஷான யோசனை! அப்படியே செய்துவிடுகிறேன்" என்றேன் நான்.

"நானைக்கே அந்தக் கல்கத்தாவில்



"என்னங்க, சர்மா நமசுக்கு எதையோ சொன்னாரு. இப்படி என்னை பயமுறுத்து றீங்களே?"

"அட, பயமுறுத்தலேப்பா! நீ சொன்ன நமசுக்குச் சிச்சா. இப்படி பயப்படறியே?

இருக்கும் சேட்டுக்கும் ஒரு கடிதம் எழுதி விடுங்கள். அவருடைய பிள்ளைக்கு டியூஷன் சொல்லித் தர இவனைப்போல வேறு யாராவது வீட்டை விட்டு ஓடி வந்தவன் அகப்பட்டால் பார்த்துக் கொள்ளட்டும்!" என்றாள் ரூபராணி.

"அப்படியெல்லாம் செய்து விடாதே! அப்புறம் இங்கும் இல்லாமல் அங்கும் இல்லாமல் நான் திண்டாட வேண்டி வந்து விடும்!" என்றான் வித்யாசங்கர்.

"இவனைப்போல ஒரு அசடு அந்த சேட்டுக்கு எங்கே கிடைப்பான்? இவனுக்குத் தினசரி அரை வயிறு சாப்பாடு போட்டு விட்டு, அறுபது நாழிகையும் ஓயாமல் ஒழியாமல் வேலை வாங்கிக் கொண்டிருப்பான், அவன்!" என்றாள் ரூபராணி.

"ஆமாம், ஆமாம். அதனால்தான் இப்படி முகம் ஒட்டி வயிறு ஒட்டிக் கிடக்கிறான் இவன்!" என்றேன் நான்.

"கூழோ, கஞ்சியோ அரை வயிற்றுக்குக் கிடைத்தாலும் சாப்பிட்டு விட்டு ஊரோடு வாசலோடு கிடப்பது எவ்வளவோ மேலானது என்று தெரியாமலா பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்?" என்றாள் ரூபராணி.

வித்யாசங்கர் சிரித்தவாறே, "அப்படியானால் நான் இங்கே தங்கிவிட்டால் அரை வயிற்றுக்குக்கூட ஆகாரம் கிடையாது என்று சொல்லுங்கள்! என்னால் அரை வயிற்றுக் கஞ்சி குடித்து விட்டுப் பட்டினியாகக் கிடக்க முடியாதப்பா! கஷ்டமோ, சிரமமோ வெளியூரில் இருக்கிறதுதான் தேவலை என்று எனக்குப் படுகிறது!" என்றான்.

"ஒன்றுக்கும் இல்லாதவன் அல்லவா வெளியூரில் போய்க் கஷ்டப்பட வேண்டும்? உனக்கு ஒன்றும் குறைவு ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள நான் இருக்கும் பொழுது உனக்கு என்ன கவலை?" என்றேன் நான்.

வித்யாசங்கரின் கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. அவன் தழுதழுத்த குரலில், "கல்கத்தாவில் இப்படி ஆறுதல் சொல்ல எனக்கு யார் இருக்கிறார்கள்? இப்படி அன்பாக, பிரியமாக, சௌஜன்யமாகப் பேச வெளியூரில் ஆட்கள் ஏது?" என்றான்.

"அதற்காகத்தான் நீங்கள் அங்கே திரும்பிப் போக வேண்டாம் என்று நாங்கள் சொல்லுகிறோம்!" என்றாள் ரூபராணி.

"நம்மிடம் சிக்கிக்கொண்ட பிறகு இவன் எங்கே போவது? இனிமேல் இவனை யார் விடப் போகிறார்கள்?" என்றேன் நான்.

வித்யாசங்கர் சொல்லுகிறான் :

15. அன்பின் ஆணை

பலவந்தம், சக்தி இவைகளை மீறி நடப்பது வெகு சுலபம்; ஆனால் அன்பின் உத்தரவை மீறி நடப்பது அவ்வளவு சுலபம் அல்ல. நான் சந்திரசேகரின் வேலையை ஒத்துக்கொண்டேன். நாலு நாட்கள் வேலை பார்ப்பதற்குள்ளேயே சந்திரசேகர் மாறி விடுவான் என்று அஞ்சினேன். "எவ்வளவு தான் சிநேகிதனாக இருக்கட்டுமே, முதலாளி முதலாளிதானே! முதலாளியாக இருப்பதில்தான் அவனுக்கு லாபம்; சிநேகிதனாக இருப்பதில் அவனுக்கு நஷ்டம் தானே?" என்று எண்ணினேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அவன் ஆப்த நண்பனாகவே இருந்தான். என் சம்பந்தப்பட்ட மட்டில் அவன் வியாபாரத்தை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. கம்பெனியையே நான் சூறையாடினாலும் 'ஏன்' என்று கேட்கமாட்டான் போலிருந்தது. 'நான்

எப்பொழுது வருகிறேன்; எப்பொழுது போகிறேன்; என்ன செய்கிறேன்' என்ற விஷயங்களில் அவன் சிறிதும் கவனம் செலுத்துவதில்லை. என் மனத்தில் 'நாம் ஒரு வேலையாள் தானே?' என்ற எண்ணமே உதிக்கக் கூடாது என்று அவன் விரும்பினான். அவனுடைய செய்கை என் மனத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. நான் ஒரு வேலைக்காரனாக இருந்தும் வேலைக்காரனாக இல்லை; அவன் ஒரு முதலாளியாக இருந்தும் முதலாளியாக இல்லை. கம்பெனியை என்னை நம்பி என் கையிலேயே ஒப்படைத்து விட்டான். அவன் கடைப் பக்கம் எட்டிப் பார்ப்பதுகூட இல்லை.

நானும் என் அம்மாவும் ஓர் அழகிய வீட்டில் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தலானோம். ஆனால் என் மனத்தில் ஏதோ ஒரு விவரிக்க முடியாத உணர்ச்சி அடிக்கடி எழுந்தது. அந்த உணர்ச்சி எங்கள் இருவருடைய மகிழ்ச்சியிலும் மண்ணைவாரிப் போட்டு விடுமோ என்ற அச்சமும் என் மனத்தில் அடிக்கடி எழுந்தது. அதனால் வெகு ஜாக்கிரதையாகவே நான் இருக்கலானேன்.

நந்தகிசோர் இவற்றையெல்லாம் கவனிப்பதேயில்லை. என்னையோ, ரூபாராணியையோ அவன் சந்தேகப் பார்வையுடன் பார்த்ததேயில்லை. எங்களிருவரையும் ஒரு காலத்தில் காதல் நோய் பீடித்திருந்தது. சிறிது காற்றுப் பட்டால் கூடப் போதும், அது திரும்பவும் எங்களைப் பீடித்து விடக் கூடும் என்பதை அவன் உணரவில்லை. கணவனும் மனைவியும் காலையில் எங்காவது உலாவப் போனால்கூட, என்னைப் பலவந்தப் படுத்தி இழுத்துப் போவார்கள். சினிமா பார்க்கப் போகும்போதுகூட அவர்கள் என்னை அழைக்கத் தவறுவதில்லை. என்ன 'புரோகிராம்' போட்டாலும் என்னையும் சேர்த்துக் கொண்டுதான் போடுவார்கள். அவர்களுடன் போக எனக்கு வெகு சந்தோசமாயிருக்கும். ஆனால் அவர்களுக்குச் சிறிதாவது சங்கோசமே உதிப்பதில்லை. என்னை அவர்கள் தன் வீட்டானாகவே கருதினார்கள். நான் இல்லையேல் அவர்களுக்கு எதிலுமே இன்பம் ஏற்படுவதில்லை. இப்படியே நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. நான் அவர்களுடைய கம்பெனியில் வேலை செய்வதின் மூலம் பணத்தைக் குவித்துக் கொண்டிருந்தேன். பணத் திமிரில் எனக்கு உலகமே அலட்சியமாகக் கூடத் தோன்ற ஆரம்பித்து விட்டது. ஆனால் என் மனம் மட்டும் ஒரு நிலையற்று இருந்தது. நாளுக்கு நாள் என் மனக் குழப்பம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

ஒரு நாள் நான் நந்தகிசோரைப் பார்ப்பதற்காக அவனுடைய வீட்டுக்குப் போயிருந்தேன். அப்பொழுது அவன் வீட்டில் இல்லை. நான் வந்த வழியே திரும்பினேன். ரூபாராணி என்னைத் தடுத்து நிறுத்தினாள். மறுதளிக்க முடியாமல் நான் சிறிது நேரம் அங்கே தங்கும்படியாகிவிட்டது. என் மார்பு 'படபட' வென்று அடித்துக் கொண்டது.

ரூபாராணி என்னை ஒரு ஸோபாவில் உட்காருமாறு சமிக்ஞை செய்தாள். பிறகு புன்முறுவலுடன், "ஆமாம், நீங்கள் எப்பொழுது பார்த்தாலும் அவரையே பார்க்க வருகிறீர்களே, நான் ஒருத்தி இருப்பதாக உங்களுக்கு நினைவே இல்லையா?" என்றாள்.

என் மார்பு இன்னும் அதிகமாக அடித்துக் கொண்டது. "அநியாயமாக என்மீது ஏன் பழி சுமத்துகிறீர்கள்? நான் அவரை மட்டுமா பார்க்க வருகிறேன்? உங்களையும்தான் பார்க்க வருகிறேன்!" என்றேன்.

"பொய், பொய்! முழுப் பொய்! கொஞ்சங்கூட உண்மைக் கலப்பே கிடையாது!"

"இதற்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்?" என்றேன் நான்.

"பதில் ஏதாவது அகப்பட்டால்தானே நீங்கள் சொல்லுவதற்கு?" என்று கேட்டவாறு ரூபாராணி எனக்கு எதிரேயிருந்த ஸோபாவில் அமர்ந்தாள். (தொடரும்)

சட்டர்ஜியின் கேள்வி!

வங்க இலக்கியத்துக்குப் புத்துயிரளித்த பங்கிம் சட்டர்ஜி ஒரு நண்பருடன் இரண்டு மணி நேரம் வரை பேசிக்கொண்டேயிருந்தார். அந்த இரண்டு மணி நேரமும் அவர் தம்முடைய நாவல்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார். அந்த நண்பரும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டே வந்தார்.

கடைசியில் ஸ்ரீ சட்டர்ஜி அந்த நண்பரைப் பார்த்து, "சரி, இது வரை என் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசினோம். இனி உங்களுடைய சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசுவோம். நான் கடைசியாக எழுதிய நாவலைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்!

அதிர்ஷ்ட சக்கரம்

உமாபுத்திரன்

கிழவர் வீட்டுக்குள் நுழையும்போது அவர் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. ஏதோ காணற்கரிய பொக்கிஷத்தைக் கண்டெடுத்துவிட்டவர் போல் உற்சாகமாக உள்ளே நுழைந்தார் அவர்.

அப்போது இருட்டும் சமயம். கூடத்தில் சேகரன் அம்மாவுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தான். அன்று அவனுக்கு இரவு 'ட்யூட்டி.' அதற்குப் புறப்படுவதற்கான ஆயத்தங்களையெல்லாம் செய்து முடித்துவிட்டு, அப்பா வருவதற்காகக் காத்திருந்தான் அவன்.

"மங்களம், இதோ பாரு!" என்று சொல்லிக்கொண்டே கூடத்துக்கு வந்தார் கிழவர். அவர் முகத்தில் எல்லையற்ற ஆனந்தம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

"என், இன்னிக்குச் சீட்டாட்டத்திலே வழக்கத்துக்கு விரோதமா ஏதாவது ஜயிச்சுட்டேளா? சந்தோஷம் தாங்கலையே!" என்றாள் தாயார். சேகரன் அந்தக் கேள்வியை ஆமோதிப்பது போல் சிரித்தான். ஆனால் கிழவர் இதனாலெல்லாம் தன் உற்சாகத்தை இழந்துவிடவில்லை. சீட்டாட்டத்தில் என்றைக்கும் போல அன்றைக்கும் தோல்விதான். இருந்தாலும் அந்தத் தோல்விக்கெல்லாம் ஈடு செய்வது போல் வேறொரு பெரிய சம்பத்தை இப்போது அவர் தன்னுடன் கொண்டு வந்திருந்தார். மனைவி கேட்ட கேள்வியினால் ரோசமடைந்தவர் போல், "இதோ பாரு, இதுதான் என் சந்தோஷத்துக்குக் காரணம்" என்று கூறி மேஜைமேல் ஒரு வஸ்துவை வைத்தார்.

சேகரனும், கிழவியும் ஆச்சரியத்துடன் அதை உற்றுப் பார்த்தனர். அது ஒரு சாதாரணமான வஸ்துதான்; நடுவில் சிகப்புத் துணியினால் சுற்றப்பட்ட ஒரு வட்ட வடிவமான பாகம் காணப்பட்டது. அந்த வட்டத்தைச் சுற்றிச் சூரிய கிரணம் போல் சிறு சிறு கம்பிகள் நீட்டிக்கொண்டிருந்தன. அந்தக் கம்பிகளெல்லாம் வெள்ளியில் செய்யப்பட்டவை போல் மின்னின.

"இதென்ன இது, என்னமோ சிலந்திப் பூச்சி மாதிரி எதையோ வச்சுட்டு பெரிய யுத்தத்தில் ஜயிச்சுட்டவா மாதிரி நிற்கிறேளே!" என்றாள் கிழவி.

"இது என்ன, தெரியுமா? நான் சொன்னேனே, அந்த அதிர்ஷ்ட சக்கரமாக்கும்!" என்றார் கிழவர் கர்வத்துடன்.

"ஓ, அதுவா இது? நான் என்னமோ, ஏதோன்னு பயந்தே போயிட்டேன்!" என்று கிழவி பரிகாசமாகக் கூறினாள். சேகரன் இப்பொழுதும் அம்மாவை ஒரு அசட்டுச் சிரிப்பினால் ஆமோதித்தான்.

"எவனோ ஒரு சந்தேகப் பிரகிருதி இந்த அதிர்ஷ்ட சக்கரத்தை வாங்கி இரண்டு வரங்கள் கேட்டானாம். இரண்டும் அசம்பாவிதமானவை. இருந்தாலும் அவை யிரண்டும் பலித்துவிட்டன. அவனுக்கு இதனால் ஆச்சரியம் உண்டாயிற்றே யொழிய அந்த அதிர்ஷ்ட சக்கரத்தின்மேல் கொஞ்சம் கூட நம்பிக்கை ஏற்படவில்லை. அதன்மேல் அவனுக்குச் சந்தேகம்தான் அதிகமாயிருந்தது. தான் கேட்ட இரண்டு வரங்களும் நிறைவேறியதற்கு வேறு காரணம் இருக்கவேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. இந்தச் சந்தேகம் காரணமாக அவன் தன் மூன்றாவது வார்த்தை இன்னும் அசம்பாவிதமாக்கினான். 'இந்த அதிர்ஷ்ட சக்கரம் உண்மையானதாயிருந்தால் என் உயிர் இன்றைக்குள் போய் விடட்டும்!' என்று கேட்டான். அன்றிரவு வெகு நேரம் வரை அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. நேரமாக ஆக ஏதோ விவரிக்க முடியாத பீதி அவன் மனதில் உருவாகிக் கொண்டிருந்தது. 'ஒருவேளை நாம் கேட்டது பலித்து விட்டால் என்ன செய்வது?' என்று பயப்பட ஆரம்பித்தான். இந்த பயம் வரவர அதிகமாயிற்று. கேட்ட வார்த்தை மாற்றவும் முடியாது. மனதுக்கு என்னவெல்லாமோ தைரியம் சொல்லிப் பார்த்தான்; ஒன்றும் பிரயோஜனமில்லை. இரவு மணி பதினொன்றே முக்கால் ஆகிவிட்டது. 'இன்னும் கால் மணி நேரம் சென்று விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்!' என்று எண்ணினான் அவன்.

"ஆனால் அதிர்ஷ்ட சக்கரமா, சும்மாவா? அன்றைக்கு ராத்திரி மணி பன்னிரண்டு அடிக்க அஞ்சு நிமிஷம் இருக்கிறப்போ

திமர்னு மாரடைக்கிறப்போல இருந்தது அவனுக்கு. மறு கணம் பிராணன் போய்விட்டது!" என்று கிழவர் அந்த அதிர்ஷ்ட சக்கரத்தின் அபூர்வ சக்தியை விளக்குவதற்காக ஓர் அற்புதமான கதையைச் சொல்லி முடித்தார்.

"ஆமாம், அதை வச்சுண்டு நீங்கள் என்ன பண்ணப் போகிறேள்?" என்று கேட்டாள் கிழவி.

"என்ன அம்மா, அப்படிக் கேட்கிறே? அதிர்ஷ்ட சக்கரமா, சும்மாவா? இப்போதையச் செலவுக்கு ஓர் ஆயிரம் ரூபாய் அதனிடம் கேட்டால் போச்சு!" என்றான் சேகரன் கேலியாக.

உடனே கிழவருக்குப் பிரமாத ரோசம் வந்துவிட்டது. "ஏன், ஆயிரம் ரூபாய் கேட்டால் கிடைக்காதுன்னு நினைச்சுண்டிருக்கயா? அதுவும் கிடைக்கும், அதுக்கு மேலேயும் கிடைக்கும்; தெரியுமா?" என்றார்.

"அட, அப்படியா? ரொம்ப ஆச்சரியமான்னா இருக்கு?" என்றான் சேகரன்.

"ஆச்சரியமென்ன ஆச்சரியம்? அது என்ன சாதாரண சாமானு? எவ்வளவு சாஸ்திரோக்தமா தயார் பண்ணியிருக்கா!" என்று சொல்லிக் கொண்டே கிழவர் அந்த அதிர்ஷ்ட சக்கரத்தைக் கையில் எடுத்துக் கொண்டார். நடுவிலிருந்த வட்டமான பாகத்தைக் கட்டை விரலுக்கும், சுட்டு விரலுக்குமிடையே அழுத்தமாகப் பிடித்து அதை முகத்துக்கு நேராகக் கொண்டு வந்தார். கண்ணை இறுக மூடிக்கொண்டு ஒரு நிமிஷம் அசையாமல் நின்றார். பிறகு, "அதிர்ஷ்ட சக்கரமே! எனக்கு ஆயிரம் ரூபாய் கொடு!" என்று பக்தி சிரத்தையுடன் கேட்டுவிட்டு, மறுபடியும் அதை மேஜைமேல் ஜாக்கிரதையாக வைத்தார்.



சேகரன் ஒரு பெருமூச்சுடன், "உம், எனக்கு ஆபீஸுக்கு 'டைம்' ஆகிறது. நான் போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே புறப்பட்டான். கிழவரும், கிழவியும் வாசற்படி வரையில் சென்று அவனை வழியனுப்பினர்.

2

நடு நிசி சமயம். வீட்டில் நிசப்தம் குடி கொண்டிருந்தது. கிழவரும், கிழவியும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று வாசற் கதவை யாரோ 'தட தட'வென்று தட்டும் சத்தம் கேட்டது.

"என்ன, குழந்தை அதுக்குள்ளே வந்துட்டானு? இப்போ மணி என்னவென்று பாருங்கோ!" என்றாள் கிழவி கொட்டாவிக்கு நடுவே. அப்போதுதான் மணி ஒன்றடித்திருந்தது.

மறுபடியும் கதவு பலமாகத் தட்டப்பட்டது. இருவரும் பரபரப்புடன் வாசற் பக்கம் ஓடினார்கள். கதவைத் திறந்தவுடன் சேகரன் உள்ளே நுழையவில்லை; அதற்குப் பதிலாக யாரோ ஒரு புதிய மனிதர் உள்ளே வந்தார். கிழவரும், கிழவியும் திடுக்கிட்டு அவரையே பார்த்தனர். வந்தவரும் ஏதோ திருடன்போல் அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றார்.

"என்ன சமாசாரம்? நீங்க யாரு?" என்றார் கிழவர் திகிலுடன்.

"நான் ஹார்பரிலேயிருந்து வருகிறேன். அங்கே 'இம்போர்ட் செக்ஷன்' மானேஜர் நான்............!" என்று கூறி நிறுத்தினார் வந்தவர்.

சேகரனின் பெற்றோருக்குத் தூக்கி வாரிப் போட்டது. மறுவிநாடி இருவரும் சேர்ந்தாற்போல், "என்ன! குழந்தைக்கு என்ன நேர்ந்தது?" என்று கத்தினார்கள்.

வந்தவர் சேகரனின் கதியைப் பற்றிச் சொன்னார்:

ஹார்பரில் பெரிய பெரிய ராணுவ யந்திரங்கள் கொண்ட ஒரு அமெரிக்கக் கப்பல்



வந்திருந்தது. அதிலிருந்து யந்திரங்களைக் கூலிகள் கீழே இறக்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது அகஸ்மாத்தாக அந்தப் பக்கம் வந்த சேகரன் அங்கு என்ன நடக்கிறதென்று பார்க்கச் சற்று நின்றான். ஒரு பிரம்மாண்டமான ராணுவ பீரங்கியைக் கப்பலிலிருந்து யந்திரத்தின் உதவியால் தூக்கிக் கீழே வைக்க முயன்றுகொண்டிருந்தார்கள் கூலிகள்., திடீரென்று "ஸார், ஸார்! இங்கிட்டு வந்திருங்க!" என்று கூக்குரலிட்டுக்கொண்டே அவர்கள் நாலா பக்கமும் சிதறிஓடினார்கள். சேகரன், "என்ன?" என்று கேட்டுக் கொண்டு நகருவதற்குள் 'சட சட' வென்ற சத்தத்துடன் பீரங்கி, யந்திரத்தின் பிடியிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது. சேகரன் அதற்கடியில் அகப்பட்டுக் கொண்டு விட்டான்! மறு நிமிஷம் அங்கு ஒரேயடியாகக் கூட்டம் கூடி விட்டது. யந்திரத்தின் உதவியால் மறுபடியும் பீரங்கியை மேலே தூக்கியபொழுது, அது விழுந்த இடத்தில் சேகரனின் உடல், அடையாளம் தெரியாதபடி நசுங்கிக் கிடந்தது! உடனே பரிசோதனைக்காக உடலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விட்டார்கள்.

இந்தக் கதையைச் சொல்லி, சேகரனின் பெற்றோரைக் கூட்டிக் கொண்டு போவதற்காகவே அந்த ஹார்பர் ஆபீஸ் மானேஜர் வந்திருந்தார்.

கிழவரும், கிழவியும் அலறிப் புடைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள்.

சேகரின் உடலுடன் அவர்கள் அலங்கோலமாக வீடு வந்து சேரும்பொழுது விடிந்து விட்டது. அன்று மாலையில் ஹார்பரிலிருந்து பெரிய அதிகாரியொருவர் வந்து, சேகரனின் உயிருக்கு நஷ்ட ஈடாகக் கிழவரிடம் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து விட்டுச் சென்றார்!

அதிர்ஷ்ட சக்கரம் எப்படியோ கிழவர் கேட்ட வரத்தைக் கொடுத்து விட்டது! ஆனால் இவ்வளவு கோரமான முறையில் அது வேலை செய்யுமென்று யார் நினைத்தார்கள்?

3

அன்றிரவு முழுவதும் கிழவரும், கிழவியும் கண்கொட்டவில்லை. இருவரும் பித்துப் பிடித்தவர்கள் போல் உட்கார்ந்திருந்தார்கள். அழுதழுது அவர்களுடைய கண்கள் நீர்ச் சுவடே யில்லாமல் வற்றி விட்டன.


திடீரென்று கிழவி ஒரு புதிய சக்தியுடன், "அந்த அதிர்ஷ்ட சக்கரம் எங்கே?" என்று கூச்சலிட்டாள்.

"எதுக்காகக் கேட்கிறே?" என்றார் கிழவர் பயத்துடன்.

"நம்ம குழந்தையைத் திருப்பித் தரச் சொல்லி அதுகிட்ட வரம் கேளுங்கோ...... சீக்கிரம் அதைக் கொண்டு வாருங்களேன்!" என்று பொறுமை யிழந்து கத்தினாள் கிழவி.

கிழவர் ஒரு நிமிஷம் தயங்கினார். மறு நிமிஷம் கூடத்தை நோக்கி ஓடினார். இருட்டில் தட்டித் தடவிக் கொண்டு மேஜையை நெருங்கி அதன்மேல் கையை வைத்தார். முதலில் அவர் கையில் பட்டது அந்த அதிர்ஷ்ட சக்கரம்தான். மறு விநாடி அவர் மூச்சைப் பிடித்துக் கொண்டு, "அதிர்ஷ்ட சக்கரமே, என் குழந்தையை மறுபடி எங்கிட்டே கொண்டு வா......உன் சக்தி நிஜமா யிருந்தால் இப்பவே என் சேகரனை எங்கிட்டே திருப்பிக் கொடு......!" என்று கத்தினார்.

அவர் சொல்லி வாய் மூடு முன்னர் வாசற் கதவை யாரோ 'தட தட' வென்று தட்டும் சத்தம் கேட்டது.



டைரக்டர்:—ஓய், நிறுத்தும் உம்முடைய பாட்டை! சூட்டு போட்டுண்டு வந்து அந்தக் 'காதலி'யின் பக்கத்திலே 'ஜம்'மென்று உட்காரும் ஐயா என்றால்.........

நாரதர் வேஷக்காரர்:—மன்னிக்கவும், வழக்கமாக நாரதர் வேஷம் போட்டே பழக்கமாகி விட்டதால், இது ஸோஷியல் படம் என்று எனக்கு ஞாபகமில்லை!

"என் குழந்தை வந்துட்டான்!" என்று கூச்சலிட்டுக் கொண்டே வாசற் பக்கம் ஓடினாள் கிழவி.

ஆனால் கிழவரைத் திடீரென்று விவரிக்க முடியாத ஒருவித பீதி பற்றிக் கொண்டது. "மங்களம்! வேண்டாம்; கதவைத் திறக்காதே!......வேண்டாம், வேண்டாம்.....!" என்று தொண்டை கிழியக் கத்திக் கொண்டே மனைவியைத் தடுப்பதற்காக ஓடினார். ஆனால் இருட்டில் குறுக்கே கிடந்த ஒரு நாற்காலியில் அவர் கால்கள் இடறி விட்டது. உரத்த குரலில், "திறக்காதே! வேண்டாம், வேண்டாம்!" என்று கத்திக் கொண்டே தடாலென்று கீழே விழுந்தார்.

* * *

விடிவதற்கு முன்னமேயே எழுந்திருந்து சமையலறையில் காப்பி தயார் செய்து கொண்டிருந்த கிழவி, வாசற் கதவு தட்டப்படும் சத்தத்தையும் அதைத் தொடர்ந்து வந்த கணவனின் விபரீதக் கூச்சலையும் கேட்டு ஒடுங்கிப் போய் விட்டாள். அடுப்புக் காரியத்தை அப்படியே போட்டு விட்டு, முற்றத்தில் வேலை செய்துகொண்டிருந்த வீட்டு வேலைக்காரியிடம் வாசற் கதவைத் திறக்கும்படி சொல்லிக் கொண்டே நேரே கிழவரிடம் ஓடினாள்.


அவர் விழித்துக் கொள்வதற்கும் சேகரன் உள்ளே நுழைவதற்கும் சரியாயிருந்தது. கிழவருக்குச் சுயநினைவு வர ஒரு நிமிஷம் பிடித்தது.

ஏ, அப்பா! எவ்வளவு கோரமான கனவு!

மனைவியும், மகனும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, கிழவர் எழுந்திருந்து வெறிபிடித்தவர் போல் கூடத்துக்கு ஓடினார். அங்கே பெஞ்சியில் கிடந்த அதிர்ஷ்ட சக்கரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தார். நன்றாய் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த அடுப்புக்குள் அந்த அதிர்ஷ்ட சக்கரத்தை வீசி யெறிந்துவிட்டு, "அப்பா! தொலைந்தது சனியன்!" என்று சொல்லிக் கொண்டே அடுப்பைப் பார்த்தார். அந்த அதிர்ஷ்ட சக்கரம் என்ற அப்பாவி வஸ்து அக்கினி பகவானுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக இரையாகிக் கொண்டிருந்தது!

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.


கல்கி



ALKI மார்ச் 2, 1947 4 அணா



ஏஜண்டுகள்:—ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா; ஸ்ரீஜய மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி.



கர்ப்பச் சேதத்துக்குப் பிறகும், பிரஸவத்துக்குப் பிறகும், நீடித்த ஜுரங்களுக்குப் பிறகும் தலைமயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜுரமானாலும் மயிர் அபரிமிதமாகக் கொட்டும். சில சமயம் விடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். எந்தக் காரணத்தால் மயிர் உதிர்ந்தபோதிலும், கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்ப கேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.

REGD. No. M. 4392

